# இந்தியக் குடிசை



பெர்னார்தன் தெ சேன்பியேர்

சிந்தனைப் பதிப்பகம்

# இந்தியக் குடிசை

பி.4.31-4

# இந்தியக் குடிசை

(குறு நாவல்)

பிரெஞ்சு மூலம்

**பெர்னார்தன் தெ சேன்பியேர்**

தமிழாக்கம்

**திரு. இரா. தேசிகப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.**

**சிந்தனைப் பதிப்பகம்**

எழும்பூர் : : சென்னை-8

முதற் பதிப்பு : மே, 1968.
பதிப்புரிமையுடையது

விலை ரூ. 1-50

© சிந்தனைப் பதிப்பகம் 1968.

'நமது பெருமை சிந்தனையைப் பொறுத்தே அமையும்.'
—பாஸ்கல்

விரைவில் வரும் புதிய நாவல்

# இருள் விலகியது

பேராசிரியர்
திரு. கோ. மா. காந்தி, எம். ஏ., (தத்துவம்) எம். ஏ. (ஆங்கிலம்).

---

ஐடியல் பிரிண்டர்ஸ், சென்னை.

# கதையும் கருத்தும்

மன்பதையில் மனிதன் வாழத் தொடங்கிய காலந் தொட்டுக் கதையும் பிறந்திருக்கிறது. மனிதனும் வாழ்க்கையும் இருக்கும் வரையில் சொல்வதற்குக் கதைகளும் இருந்து வரும்; கதை சொல்பவர்களும் இருப்பார்கள். வாழ்வே ஒரு கதையாகத்தான் இருக்கின்றது.

கதைகளில் காலத்தை வெல்லக் கூடியவையும், காலத்தால் அழிந்துபடக் கூடியவையும் உண்டு. கதை என்பது கற்பனையில் பிறந்து, கருத்தில் வளர்ந்து, தத்துவத்தில் தோய்ந்து, நோக்கில் சிறந்து, கலை வடிவில் முடிவுறல் வேண்டும். அவ்வாறான கதைகளே மன்பதைக்குத் தேவையானவையும் இன்றியமையாதனவையும் ஆகும். உயிரும் உரமும் உள்ள கதைகளால் மட்டுமே குமுகாயம் நன்மையும் வளர்ச்சியும் முன்னேற்றமும் பெற முடியும். தம்முடைய கதைகளில் அறிவுக் கூர்மையுள்ள வாதங்களை எழுப்புவது பெர்னார்ட்சாவின் மரபு. காரணம் அவர் எழுத்தாளராக மட்டுமின்றி, சிந்தனையாளராகவும், பகுத்தறிவாளராகவும், படைப்பாளராகவும் இருந்ததேயாகும். வெறும் எழுத்தாளராக உள்ளவர்கள் ஆழமும் ஆற்றலுமுடைய இலக்கியங்களைப் படைக்க இயலாது.

கதை மாந்தர்கள் ஊமையர்களாய் இல்லாமல், உயிரும் அறிவும் உள்ளவர்களாய் இருப்பார்கள் என்பதே பெர்னார்ட்சாவின் கதைகளுக்குள்ள தனிச் சிறப்பாகும்.

‘நாவல்’ என்னும் இலத்தீன் மொழி வேர்ச்சொல்லுக்குப் புதுமை, புதினம் என்பது பொருள். இதுவே ஆங்கிலத்தில்

மருவி வரும்போது நெடுங்கதை எனப் பொருள்படும். இத்தாலிய மொழியில் 'நாவல்லா' (Novella) எனும் இச் சொல்லுக்குக் 'குறுகியதொரு புதிய பொருள்,' 'செய்தி' என்று இரு பொருள்கள் உண்டு...பிற ஐரோப்பிய மொழி களிலும் 'நாவல்' எனும் சொல், ஒரு வழியில் புதுமையைக் குறிப்பதாகவே அமைந்துள்ளது. புதினம் என்பதை வாழ்க்கை வரலாறு, வாழ்வுக் குறிப்பு, வரலாறு ஆகிய வற்றிலிருந்து தோன்றிய ஒரு பகுதி எனலாம். சுருங்கச் சொல்லின், 'நாவல்' என்பது விரிந்த பொருளுடையது. நாவல் பல வகைப்படும். துயரம், சிரிப்பு, அங்கதம் முதலியன இவற்றுள் அடங்கும்.

டிக்கன்சின் நெடுங் கதைகள் இங்கிலாந்து நாட்டில் புரையோடிக் கிடந்த பல சமூகக் கேடுகளை நீக்கத் துணை புரிந்துள்ளன. முக்கியமாகக் கல்வித் துறையிலும், சிறை விதிகளை மாற்றுவதிலும், சிறுவர்களை வேலைக்கமர்த்தும் ஏற்பாடுகளிலும் ஏற்பட்ட சீர்திருத்தங்களுக்கு அவருடைய நெடுங்கதைகளே காரணமாகும். அதுபோலவே, எமலி சோலாவின் புதினங்கள் பிரான்சு நாட்டின் பல விதச் சமூகக் கேடுகளை நீக்கியுள்ளன. டால்ஸ்டாய் எனும் நாவலாசிரியர் உருசியப் புரட்சியின் கண்ணுடி போல் விளங்கினுர் என்பது லெனின் கூற்று. போமார் சேயின், 'பிதாரோவின் திருமணம்'(Le Marriage de Figaro) எனும் நாவல் பிரெஞ்சுப் புரட்சியின் வாயிலாக இருந்திருக்கிறது. இதனுல் நெடுங் கதைகளின் வலு தெரிய வரும்.

ஒவ்வொரு பொருளிலும் ஒரு வரலாறு அடங்கியிருப்பது போலவே, எல்லாருடைய வாழ்விலும் ஒரு கதையும் அடங்கி யுள்ளது. ஆனுல், இக்கதையை எல்லோராலும் எழுத முடியாது. எமர்சன் கூற்றுப்படி ஒவ்வொரு மனிதனும் ஒரு புத்தகமாகவும் இருக்கின்றுன். ஆனுல், எல்லோரும் அவனுடைய தனி ஆளுமைகளைப் படிக்க முடியாது. புத்த கத்தைப் படிப்பது எளிது; மனிதனைப் படிப்பது கடினம். கலை உள்ளமும்,கற்பனை வளமும், இலக்கியப் புலமையும்,

நிகழ்ச்சிகளை உற்று நோக்கும் ஆழ்ந்த கண்ணேட்டமும், தொலை நோக்கும், நிரம்பிய அனுபவமும் உள்ளவர்களே பெருங் கதையையும் சரி, குறு நாவலையும் சரி, எழுத முடியும். அவர்களுடைய நெடுங்கதைகள், குறு நாவல்கள் மன்பதைக்குப் புரதப் பொருளாக அமையக் கூடியனவாம். அதனுலேதான், நாவல் ஓர் இலக்கியமாகக் கருதப்படு கின்றது...இலக்கியம் என்று சொல்லக் கூடியதே, படைக்கக் கூடிய தனி ஆளை விளக்கிக் காட்டுவதுதான். நாவல், எளிமையும் அருமையும் மிக்க ஓர் இலக்கியக் கலை. அக வாழ்வுக்கு இலக்கியம் தேவை.

நாவலுக்குக் கதைக் கோப்பு, மொழி நடை, பாத்திரப் படைப்பு ஆகிய மூன்றும் முக்கியமாகும். பாத்திரங்களுக் கிடையே நிகழுகின்ற உரையாடல், இவை நிகழக் கூடிய காலம், இவற்றை விவரிக்கக் கூடிய தகுந்த சொல்லாட்சி, ஆசிரியர் கண்ட வாழ்க்கைத் தத்துவம் இவைகளே நாவலுக்கு அங்கங்கள். 'புலன் வழி உணர்த்தப்படும் கருத்தே நாவல்' என்கிருர் ஜோசப் கான்ராடு (Joseph Conrad). வெறும் கதை மட்டும் நாவலாகாது.

உறுதியான நம்பிக்கைகளிலிருந்து பிறப்பதுதான் சிறந்த இலக்கியங்களாக விளங்க முடியும். வாழ்வும் நம்பிக்கையைக் கொண்டே அமைவதாகும். ஒரு நாவ லாசிரியன் வாசகர்களின் கற்பனையை நிறைவு செய்கின்ற வஞக இருக்க வேண்டுமே தவிர, பிந்திய தலைமுறை ஒன்றிற்குத் தன்னுடைய புலமையை வெளிப்படுத்துகிற வஞக இருந்துவிடக் கூடாது. சில புதினங்களைப் படிக்கும் போது, நம்முடைய வாழ்வை அல்லது நம் நாட்டுச் சிக்கை எவ்வாறு ஆசிரியன் நுணுக்கமாகக் கண்டறிந்து எழுது கின்ருன் என்ற வியப்பு ஏற்படுகிறது. இப்படியொரு நிலையைச் சிறந்த கலைப் படைப்பன்றி வேறெதுவும் ஏற்படுத்த இயலாது. மிகச் சிறந்த இலக்கியம் ஒன்றைப் படைப்பது என்பது, விருப்பத்தையும் துணிவாற்றலையும் பொறுத்தது... சிறந்த இலக்கியத்தில் கதையோடு கருத்தும், கருத்தோடு

கதையும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்திருத்தல் வேண்டும். ஒரு நாவலாசிரியனுடைய உண்மையான கடமை சிறந்த இலக்கியம் படைப்பதில்தான் அடங்கியுள்ளது. இதுவல்லாத மற்றைய செயல் எதுவும் முக்கியமுள்ளதாய் இருக்காது. புகழ்பெற்ற ஆங்கில திறனாய்வாளர் ஜே. பி. பிரிஸ்ட்லி, "'ஆக்கியோன்' எனும் சொல்லானது உண்மையில், படைப்பாளியைக் குறிப்பதாகுமே தவிர, அச்சொல் வெறும் எழுத்தாளனொருவனைக் கண்டிப்பாகக் குறிக்காது என்பதை நாம் குறிப்பாக மறந்துவிடுகிறோம்", * எனக் கூறுவது உன்னத் தக்கது. நல்லாசிரியன் ஒருவன்தான் நல்ல இலக்கியத்தைப் பிறப்பிக்க முடியும். ஆனால், நல்லதற்கும் கெட்டதற்கும் கொடுக்கப்படும் உழைப்பு மட்டும் ஒரே மாதிரி அளவில்தான் உள்ளது.

கலை வாழ்வை மேம்படுத்துகிறது, உயர்த்துகிறது; குறிக்கோளாக்குகிறது. 'கலையின் பயன் அதன் நிறைவேயாகும்', என்கிறார் சாக்கரட்டீசு. வளர் கலை பெரிது; வாழ்வு சிறிது. கலை என்பது உண்மைக்கு வலுவூட்டுவதாகும். கலை, கலைக்காகவே இல்லாமல் வாழ்வுக்காக இருத்தல் வேண்டும். வாழ்க்கை என்பது, உண்மையில், கலையின் மறுவடிவமேயாகும். மனிதனுக்காகக் கலையே அன்றிக் கலைக்காக மனிதன் அல்லன். இலக்கியம் ஒரு கலையாகும். நல்ல திறனாய்வு நல்ல இலக்கியப் படைப்பிற்கு விதையாகும். திறனாய்வு இலக்கியத்தை வளர்க்கும், மேம்படுத்தும். இன்று திறனாய்வு ஒரு கலை என்ற நிலையைக் கடந்து அது ஒரு விஞ்ஞானம் என்ற கருத்தும் வேரூன்றத் தொடங்கியுள்ளது. ஆகவே, கலை வளர்ச்சிக்குத் திறனாய்வு மிக முக்கியம்.

---

* "We forget, for instance, that the word "author" really means an 'originator' and not, strictly speaking simply a writer." *The Author and the Public*, Statement of the theme: J. B. Priestly, p. 27, 1957, (Hutchinson, London.)

இன்று அச்சுக்கூடங்களிலிருந்து நாள்தோறும் நாவல்கள் வெளிவந்த வண்ணமாகவே இருக்கின்றன. அவை நல்லவையா? கெட்டவையா? என்பதை யார் முடிவு செய்வது? எப்படி முடிவு செய்வது?

நூல் வெளியீட்டாளர்கள், எல்லாப் புதிய நாவல்களுமே நல்லவையே என்று தங்கள் விளம்பரங்களின் மூலம் நம்பும்படிச் செய்கின்றார்கள்.

இன்றுள்ள கலைகளில் நெடுங்கதை ஒன்றுதான் இலக்கிய வடிவில் உண்மையில் உயிருடன் விளங்கக் கூடியது. 'எழுத்துக் கலைக்கு அனுபவம் பெரிய மூல தனமாகும்' என்கிறார் மார்க் ட்வேய்ன். இன்று விண்வெளி முதல் உளப் பகுப்பு ஆராய்ச்சி வரையில் நெடுங் கதையோ, குறு நாவலோ படைக்கலாம். இவ்வளவுக்கு அதன் ஆழமும் பரப்பும் விரிந்திருக்கிறது. எல்லா இலக்கியங்களையும் போலவே, நாவலும் அதன் உட் பொருளின் ஓட்டத்திற்கு ஏற்பச் சிறந்த சொற்களைச் சிறந்த இடங்களில் (The best words in the best order) கொண்ட தொரு மொழி நடையைக் கொண்டிருத்தல் வேண்டும். நெடுங் கதையில்—குறு நாவலில் மொழி நடை என்பது முக்கிய பொருளாகும். ஏன், ஒரு வேளை, இதுவே அதற்கு மணி மகுடமாய் இருந்து விடவும் கூடும். நெடுங்கதைக்குச் சரியான கரு மட்டுமன்றி அதற்கு இயல்பான தனியொரு மொழி நடையும் இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அது இலக்கிய உருப் பெற்று நிற்கும். ஒரு நல்ல நாவலின் மதிப்பு, தொடக்கத்திலிருந்து முடிவு வரை ஆசிரியன் கையாளும் நடை அழகைப் பொறுத்தே ஒரு வகையில் தீர்மானிக்கப்படுகின்றது. நன்றாக எழுதப்படாத நாவல் எதுவும் நல்ல நாவலாக இருக்காது. ஓர் இலக்கியத்தின் சிறப்பு அதன் வடிவும் வண்ணமும் செறிவும் எவ்வாறு அமைந்துள்ளதென்பதைப் பொறுத்தே அறுதியிடப்படு கின்றது. வாழ்க்கையை வருணிக்கும் இலக்கிய வகைகளில் ஒன்று நாவல். நாவல் வாழ்க்கையைப் பிரதிபலிக்க வேண்டும்.

விலங்கிலிருந்து மனிதனைப் பிரிப்பது பகுத்தறிவு... மனிதன் பெற்றுள்ள அரிய செல்வங்களுள் பகுத்தறிவு என்பது மிக முக்கியமாகும். பகுத்தறிவு நீங்கிய ஒரு மனிதனை ஒரு பிண்டப் பொருள் (Man minus common-sense is nothing) என்றே கூறல் வேண்டும். நம்முடைய மரபு வழி நம்பிக்கைகளுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும், மூடக் கொள்கைகளுக்கும் காரணம் பகுத்தறிவின்மையே ஆகும். அரிதற்கரிய செல்வமான பகுத்தறிவை மனிதன் பெற்றிருந்துங்கூட, அவன் விலங்காய் இருக்கின்றான். அறியாமையால் உண்டாவதே மூட நம்பிக்கை. அறியாமையே மனிதனை மயக்குறச் செய்து, கேடு பயக்கிறது. 'அறியாமை தீவினையின் மூல வேர்', என்பது பிளேட்டோ கருத்து. மூட நம்பிக்கைதான் அறியாமையின் தாய்; அடிமைத் தனத்தின் எசமானி. தம் காலத்துக் கண்மூடிப் பழக்கங்களையும், சமயக் கோட்பாடுகளினாலான குருட்டு நம்பிக்கைகளையும், மக்களின் தவறான பழக்க வழக்கங்களையும் பகடி செய்து, மக்களிடையே அறிவுணர்ச்சியை உண்டாக்கியவர் வொல்த்தேர். அவர் சொல்லுகிறார்: "மூட நம்பிக்கை வெறுக்கத் தக்கது மட்டுமன்று, அருவெறுக்கத் தக்கது மாகும்." பகுத்தறிவு மலர்ந்த நிலையில்தான் அறியாமை போகும்; கண்மூடிப் பழக்கங்கள் தொலையும். பகுத்தறிவு வீற்றிருக்க வேண்டிய அரியணையில் மூட நம்பிக்கை உட்கார்ந்து கொண்டால் அந்நாடு விரைவில் வீழ்ச்சியுறும் என்பதில் ஐயமில்லை. வெறும் நம்பிக்கை என்பது சான்றுகளையோ அல்லது பகுத்தறிவையோ துணைகொண்டு நிற்பதன்று; நம்பிக்கையில் அகநிலைப் படுவதென்பது, ஒருவருடைய இன்றைய நடைப் போக்கை மிகுதியும் சார்ந்தே அமைவதாகும். சிந்திக்க வேண்டிய வழியில் சிந்தித்துப் பார்க்காத போதே மூட நம்பிக்கைகள் எழுகின்றன. அறிவியல் முறை வளர்ந்தோங்கியுள்ள இக்காலத்திலும் அநேக மூட நம்பிக்கைகள், சாதி சமய பேதங்கள், மூடப் பழக்கங்கள் தொலைந்தபாடில்லை. மூட நம்பிக்கை கொள்வதில் நம் நாட்டைப் பொறுத்த வரையில் படித்தவன், படிக்காதவன் என்ற பாகுபாடே பெரும்பாலும் இருப்பதில்லை. 'உண்மை

எல்லாக் குருட்டு நம்பிக்கைகளையும் குழி தோண்டிப் புதைத்துவிடும்', என்பது இங்கர்சால் கூற்று. உண்மை, ஒழுங்கான முறையில் சிந்திப்பவர்களுக்குரிய துறை.

குமுகாயத்தின் மாற்றத்துக்கு — மூடத்தனம் ஒழிந்த அறிவு வளர்ச்சிக்கு—நெடுங்கதை பெருந்துணை செய்ய வல்லது. ஆனால், இது செறிவும் ஆற்றலும் நிறைந்திருத்தல் வேண்டும். இல்லாவிட்டால், நன்மைக்கு மாருகத் தீமையே விளையும். இதனால், குமுகாய வளர்ச்சி என்பது பெரிதும் பாதிக்கப்பட்டுவிடும். இது நாவல் இலக்கியத்துக்கும் சரி, பிற துறை இலக்கியங்களுக்கும் சரி, பொருந்தும். நசிவு இலக்கியத்தின் மூலம் ஒரு தலை முறையைக் கெடுத்து விட்டால், அதனை மாற்ற நான்கு தலைமுறைக் காலம் அல்லது அதற்கும் மேலே பிடிக்கும். நல்லொழுக்கத்தில் கருத்தில்லாத நாவல் வாழ்விலும் கருத்தில்லாததாகிவிடும். அதனால் நெடுங்கதை ஆசிரியனின் பொறுப்பு அதிகமாகிறது. ஒரு நாவலாசிரியன் வினாக்களை எழுப்பிவிட வேண்டுமே தவிர, எழுப்பிய வினாக்களுக்கு விடை கண்டு பிடிக்கும் முயற்சியில் இறங்கிவிடக் கூடாது என்பது ஆன்டன் செக்காவின் கருத்து. வீண் பொழுது போக்கு இலக்கியங்கள் மன்பதையின் மாற்றத்துக்கோ, சமூக உயர்வுக்கோ, தனி ஆளுமை வளர்ச்சிக்கோ உதவமாட்டா. நாவல் சமூகத்தை மாற்ற வேண்டும் அல்லது சமூகக் கேடுகளை வெளிப்படுத்த வேண்டும்.

கருத்துக்கு உருக்கொடுப்பதுவே ஒரு நாவலாசிரியனின் நோக்கமாக இருத்தல் வேண்டும். அவன் ஒரு கருத்தைப் போதிப்பதோ, அறிவுரை கூறுவதோ, விற்பதுவோ இல்லை. ஆனால், ஒவ்வொரு சொல்லிலும், பாத்திரத்திலும், பாத்திரத்தின் செயலிலும், விரித்துச் சொல்லும் முறையிலும் அவனுடைய கருத்துப் பொருள் பொதிந்து நிற்கும்.

தான் எழுதிய மொழியின் கருத்தை முப்பது ஆண்டு களுக்குப் பிறகு ஓர் ஆசிரியனோ அல்லது ஓர் எழுத்தாளனோ

திரும்பவும் எடுத்துப் படிக்கும்போது, அது பயனுடையது, தேவையானது என்ற எண்ணம் உண்டாதல் வேண்டும் என்பது உருசிய நாவலாசிரியர் டாஸ்டோவெஸ்கியின் கருத்து. இதனை அளவுகோலாகக் கொண்டு, இந்நூலாசிரியரின் கருத்தையும் கதையையும் சீர்தூக்கிப் பார்த்தால், இந்நூல் வெளி வந்து நூற்றெழுபத்தெட்டு ஆண்டுகளுக்குப் பிறகும் அதன் உயிரோட்டம் மாருமல் இருப்பது தெரிய வரும். விடுதலை பெற்றுள்ள இன்றைய இந்தியாவுக்கு அன்றுபோல் இன்றும் நாளையும் இக்கதையின் கருப்பொருளான பகுத்தறிவு வழி செல்வது தேவைப்படும். மூட நம்பிக்கை ஒழிந்த பகுத்தறிவையே இக்கதையின் பொருள் பற்றி நிற்கிறது. அறிவுதான் மனிதனுக்கு வழிகாட்டி. அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலமே மிகவும் வலிவும் பொலிவும் பெற்றுள்ளவராக முடியும் என்பது கதை உணர்த்தும் பாடம். ஊரையும் பெயரையும், இடத்தையும் மாற்றிப் பார்த்தால், அனைத்துலக நாடுகளுக்கும் பொருந்தும் விதத்தில் இது உலகப் பொதுமையுடையதாக உள்ளது தெளிவாம். தவருன நம்பிக்கை எவ்வளவுதான் மேன்மைப் படுத்தப்பட்டு இருந்தபோதிலும் மன்பதை அதன் மூலம் செழுமையாக வளர்வதில்லை. தைரியமாக இடையருது செயல்படுவதன் மூலமே மன்பதை செழுமையுறும் என்பது இக்கதையின் அடிக் கருத்தாகும். அதனுல், இது உலக மக்கள் அனைவருக்கும் பொதுவானது. குறிப்பாக இது நமது சிந்தனைப் போக்கில் அசைவை உண்டாக்க வல்லது. நமது நாட்டு மக்களின் மூடத்தனத்தையும், குருட்டு நம்பிக்கைகளையும், கண்மூடிப் பழக்கங்களையும், கையூட்டுக்குப் பலியாவதையும், ஒற்றுமைக் குறைவையும், அடிமைத்தனத்தையும் தீண்டாமையின் கேட்டையும் தெளிவாகவும், நுணுக்கமாகவும் இந்நூலாசிரியர் நயமாக விளக்கிக் காட்டியிருப்பதுடன், நமது அறியாமையை—மூடத்தனத்தைக் கிண்டலும் செய்கிருர்! நாம் திரும்பத் திரும்பப் படிப்பினைகள் பெறவும், பெற்ற படிப்பினைகள் மூலம் நம்மைச் சரியான வழியில் திருத்திக்கொண்டு நடக்கவும் முற்படுவோமானல், அதுவே இந்நூலாசிரியருக்கு நாம் செய்யும்

சிறந்த கைம்மாருக இருக்க முடியும். இந்நூலின் அளவு சிறியதாயினும் கருத்துப் பெரிது. கடுகு சிறுத்திருந்தாலும் காரம் போகாதன்றே?

உண்மையையும் அறிவையும் பற்றித் தெரிந்துகொண்டு வரும்படி, இங்கிலாந்து நாட்டின் அரசரால் நமது நாட்டிற்கு அனுப்பப்பட்ட ஆங்கிலேயத் தூதுவரான பண்டிதரின் விஞவுக்கு இந்திய சமயத் தலைவர் உண்மையும் அறிவும் திருமறைகளில் அடங்கியிருப்பதாகச் சொல்வதும், அந்தணர்கள் வழியாகத்தான் உண்மையை அறிய முடியும் என்றும், அவர்களுக்கே அஃது உணர்த்தப்படுதல் வேண்டும் என்று பகர்வதும், சினத்தோடு உரையாடுவதும் தருக்கக் கலை முறைகளுக்கு எதிராகவும், அறிவுக்குப் புறம்பாகவும் இருப்பது தெரியலாம். தம் கேள்விக்கான விடையில் உண்மையையும் அறிவையும் பற்றிய பொருள் அடங்கி யிருக்கவில்லை என்பதை ஆங்கிலப் பண்டிதர் மூலம் இந் நூலாசிரியர் நிரல்பட எடுத்துக் காட்டியிருப்பது நமது சிந்தனைக்கு நல்விருந்தாகும். ஒரு நல்ல கேள்வியினுள் பாதி விடை அடங்கியிருக்கும் என்பதை இதே கதையில் வரும் பிறிதோர் உரையாடல் நிகழ்ச்சி வெளிப்படுத்தி நிற்கிறது. சிறந்த தத்துவக் கருத்துகள் எளிமையான உலகியல் உவமைகளுடன் எடுத்துக் காட்டப்படுவது நூலுக்கு மேலும் சிறப்பைத் தருகின்றது. 'மனிதர்களைவிட புலிகளை நம்பலாம்', என்ற அவருடைய கருத்து, பெரிய தத்துவ உண்மையை விளக்குவதாயுள்ளது. மேலும் அவர், 'பகுத் தறிவு பயன்படாதுபோயின், எவ்வறிவு கொண்டுதான் உண்மையைத் தேடுவது?' எனக் கடாவுவது, உண்மையில் அவருக்குள்ள பற்றை வெளிப்படுத்துகிறது...

பிரெஞ்சு மொழி சிறந்த இலக்கிய மொழி. அழகும், இசையும் மெருகும் மிகுந்த மொழி. இது துல்லியமான சொற்றிறமும், ஓசை நயமும் தெளிவும் உடையது. உன்னத நடையும் செஞ்சொல் வளமும் கொண்டது. ஐரோப்பிய இலக்கியத் துறையில், பிரெஞ்சு நாடு பல முறை முன்

ஞேடியாக இருந்து வழிகாட்டியுள்ளது. திறமையான எழுத்தாளர்கள் இந்நாட்டில் பெருமை பெறுவது போல் வேறு எந்த நாட்டிலும் பெறுவதில்லை.

இந்நூலாசிரியர் திரு. பெர்ஞர்தன் தெ சேன்பியேர் பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட ழான்-ழாக்-ருசோவின் மாணவர். பிரான்சு நாட்டில் பேர் பெற்ற அறிஞர். பல நூல்களை எழுதியுள்ளார். 1784-ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட 'இயற்கை ஆராய்ச்சி' என்னும் நூலில், தம் ஆசிரியரின் உணர்ச்சித் தத்துவங்களை நன்கு விளக்கியிருக்கிருர். 'போலும் விர்ழினியும்' (Paul et Virginie) என்னும் நவீனத்தின் மூலம் அவருடைய மேதை உலகிற்குத் தெரிய வந்தது...இதில் அவருடைய தன்னேரில்லா விளக்கமும் இயற்கை வருணனையும் மற்றவர்களைக் கவர்ந்தன. அவருடைய இயற்கை வருணனை ழான்-ழாக்-ருசோவின் வருணனைகளை விட ஓரளவு உணர்ச்சி குறைந்ததாயிருப்பினும், சரியானதாய், உருவம் நிறைந்ததாய், பொருத்தமானதாயிருக்கிறது. பல நாடுகளுக்கும் விரிவாகப் பயணம் செய்திருக்கிருர். முதலில் பொறியியல் வல்லுநராகவும், பிறகு அறநூல் ஆசிரியராகவும் பணியாற்றியிருக்கிருர்.

ஆசிரியர் பிரெஞ்சு மொழியில் 1790-ல் எழுதிய 'இந்தியக் குடிசை' (La Chaumiere indienne) என்னும் இந்நூலை முதன்முறையாகத் தமிழில் வெளியிடுவதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிருேம். இந்நூலைத் தமிழாக்கி இருப்பவர் மூதறிஞர் திரு. இரா. தேசிகப் பிள்ளை அவர்கள் ஆவர். இவர் தமிழ், பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் வல்லவர்; வழக்குரைஞர். இவருடைய முதன்மையான இலக்கியத் தொண்டு தமிழ் இலக்கியங்களைப் பிரெஞ்சு மொழியில் வழங்கியிருப்பது. ஆண்டாளின் திருப்பாவை, கம்பனின் சரசுவதி அந்தாதி, குமரகுருபரரின் சகலகலாவல்லி மாலை முதலிய பிற நூல்களைப் பிரெஞ்சு மொழியில் கவிதையாகவே வெளியிட்டு, பிரெஞ்சு மக்களின் பாராட்டையும், அரசின் மதிப்பையும் பெற்றவர். இவர்

எழுதிய பிற தமிழ் நூல்கள்: ஆனந்தரங்கம் பிள்ளை, ஸ்ரீ வேதாந்த தேசிகர் (இரண்டும் வரலாறு). பிரெஞ்சில் மொழி பெயர்த்தவை: திருவிளையாடற்புராணம், காஞ்சி புராணம், கந்த புராணம்.

இவருக்குப் புதுவைத் தமிழ்ச் சங்கம் 'மொழியாக்கச் செல்வர்' எனும் பட்டம் வழங்கிச் சிறப்பித்திருக்கிறது. 1967-ஆம் ஆண்டில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் பதக்கம் பெற்றவர். தமிழ் வளர்த்த பெரியார் திரு. ஆனந்தரங்கம் பிள்ளை அவர்களின் குடும்ப வழி வந்தவர்.

மூலத்தின் தரமும் தமிழாக்கத்தின் தரமும் ஒன்றோடொன்று இணைந்து சிறப்புடன் விளங்குமாறு, இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது.

இந்நூலைச் சிறந்த முறையில் தமிழாக்கிக் கொடுத்த எங்கள் மதிப்பிற்குரிய திரு **இரா. தேசிகப் பிள்ளை** அவர்கட்டும், ஆசிரியரைப்பற்றிய வாழ்க்கைக் குறிப்புகளை உதவிய புதுடெல்லி பிரெஞ்சுக் கழக நெறியாளர் திரு. பி. ஃபியேஷி அவர்களுக்கும், (P. Fieschi, Director, Alliance Francaise de Delhi) அவருடைய தகவுரையின் மேல் பாரிசு மாநகரிலிருந்து நூலாசிரியரின் புகைப் படத்தைப் பெற்றுத் தருவதில் உதவி புரிந்த புதுடெல்லி பிரெஞ்சு தூதரகத்தின் பண்பாடு தொழில் நுட்ப ஒத்துழைப்புத் துறையின் ஆலோசகர் திரு. டாக்டர் ஃபிரான்சிஸ் தோர் (Dr. Francis DORE, Counsellor For Cultural and Technical Cooperation) அவர்கட்கும் எங்களது உள்ளம் நிறைந்த நன்றி உரித்தாகுக.

சென்னை,
19-5-'68.

**சிந்தனைப் பதிப்பகத்தார்**

# முன்னுரை

'**இந்தியக் குடிசை**' என்னும் இந்நூல் பிரான்ஸ் தேசத்தின் பெயர் பெற்ற எழுத்தாளராகிய **பெர்னார்தன் தெ சேன்பியேர்** என்பவரால் இயற்றப் பெற்று, கி. பி. 1790-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டதாகும்.

பெர்னார்தன் தெ சேன்பியேர், இளமையிலேயே அறிவும் ஆற்றலும் உடையவராயிருந்தார். அவர் தாம் பார்த்து வந்த அலுவல்களின் நிமித்தம் பல நாடுகளுக்குச் செல்ல நேர்ந்த போது அந்நாடுகளின் நிலைமையை நன்கு ஆராய்ந்து அறியலானார்; தம் அனுபவத்திற் கண்டவற்றைக் கொண்டு அவர் பல நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் ஒன்றுதான் இந்த **இந்தியக் குடிசை**.

இஃது புனைந்து கூறும் ஒரு கதையாயினும், இதனுள் அடிப்படையான சில உண்மைகள் பொதிந்து கிடப்பதாலும், சமூகச் சீர்திருத்தத்திற்கும் நம் நாட்டின் முன்னேற்றத்திற்கும் அவை பயன்படக்கூடுமாதலாலும் இதனைப் பிரெஞ்சு மூலத்தினின்று தமிழில் மொழி பெயர்த்துத் தந்துள்ளேன். இத் தமிழ் மொழி பெயர்ப்பு தமிழர்களால் வரவேற்கப்படுமென்று நம்புகிறேன்.

**ரா. தேசிகன்.**

# ஆன்றி பெர்னர்தன் தெ சேன்பியேர்

**[Henry Bernardin de Saint-Pierre]**

இந்நூலாசிரியரின் முழுப் பெயர் ஆன்றி பெர்னர்தன் தெ சேன்பியேர் ஆகும். அவர் பிரெஞ்சு நாட்டின் பேர் பெற்ற நூலாசிரியர்; பேரறிஞர், உருசோவின் மாணவர்; முற்போக்கான சிந்தனைப் போக்குடையவர். அவர் 1737-ஆம் ஆண்டில் லெ ஆவர் என்னும் நகரத்தில் பிறந்தார். தொடக்கத்தில் அவர் இராணுவத்தில் சேர்ந்து பணியாற்றினர். இராணுவத் தொண்டு அவர் இயல்புக்கு ஒத்து வரவில்லை. வாழ்க்கையைச் சிறப்பிக்கவுமில்லை. அதனுல், அத்தொழிலை விடுத்து ஏற்புடைய தொழிலொன்றைத் தேடி அலைந்து, உருசியா, போலந்து, செருமனி முதலிய நாடுகளுக்குச் சென்ருர். 1767-ஆம் ஆண்டில் பொறியியல் வல்லுநராகப் பிரஞ்சுத் தீவாக விளங்கிய மோரீசுக்குச் சென்ருர். தான் எண்ணியிருந்ததற்கு மாருக அத்தீவு அன்று அவருக்குக் காட்சியளித்தது. அங்கு இரண்டாண்டுகள் பணி செய்த பிறகு பாரிசுக்குத் திரும்பி வந்தார். ஆயினும், அத்தீவில் காணப்பட்ட அயல் நாட்டு அழகமைப்புகள் அவர் மனத்தைக் கவர்ந்திருந்தன. அவர் 1773-ஆம் ஆண்டில் 'பிரஞ்சுத் தீவுப் பயணம்' என்னும் நூலை இயற்றினர். அதற்கு ஆலோசனை கூறியவர், பிரெஞ்சுப் புரட்சிக்குக் காரணமாக விருந்த ழான்-ழாக்-ருசோ ஆவர். முதல் நூலையடுத்து 1784-ஆம் ஆண்டில் 'இயற்கை ஆராய்ச்சி,' என்னும் நூலை எழுதி வெளியிட்டார். இந்நூலில் தம் ஆசிரியரது உணர்ச்சித் தத்துவங்களை நன்கு விளக்கியுள்ளார். இதன் பின் 1787-ஆம் ஆண்டில் "போலும் விர்ழினியும்" (Paul et Virginie) என்னும் நவீனத்தை இயற்றினர். இஃது அவர் மேதையை உலகிற்கு எடுத்துக் காட்டியது. அதனேடு அவரது வாழ்க்கை நிலையும் உயர்ந்தது. இதனைத் தொடர்ந்து 1790-ஆம் ஆண்டில் "இந்தியக் குடிசை" (La Chaumiere indienne) என்னும் குறு நாவலொன்றை எழுதினர். 1792-ஆம் ஆண்டில் மூலிகைத் தோட்டத்தின் மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். 1795-ஆம் ஆண்டில் உயர் கல்விச் சாலையின் அறநூல் ஆசிரியராக அமர்ந்தார். அரசாங்கத்தாரால் நன் மதிப்பும் பெற்ருர். 1815-ஆம் ஆண்டில் "இயற்கையின் இயைபு" என்ற நூல்

வெளி வந்தது. அவருடைய பணி இன்பமாகவும், எதையும் நன் முறையில் காண்பதாகவும் விளங்கிற்று.

இறைவன் மனிதனுக்காக உலகைப் படைத்தான் என்பது பெர்னுர்தனின் கொள்கை. நீரலையின் வெண்மை யான நுரை பாறையின் கருமையான நிறத்திற்கு மாறுபட்டி ருப்பது கப்பலோட்டிகளுக்குத் தொலைவிலிருந்தே அறிவிப் பதற்காகவே என்பதும், இன்சுவையுள்ள வெள்ளரிப் பழத்திற்குப் புடை பெயர்ந்த கீற்றுகள் இருப்பது அப் பழத்தைக் குடும்பத்திலுள்ளார் அனைவரும் கலந்து உண்பதற் காகவே என்பதும் அவருடைய கருத்து. கலைக்களஞ்சிய ஆசிரியர்கள் புய்ப்போன் (Buffon) முதலியோர் காலத்தவ ராகிய 'பெர்னுர்தன்', ஞாயிறு பூவுலகத்தைச் சுற்றுகிறது என்றுர். சமரேகையில் பூமண்டலம் கனத்திருக்கிறதென்ற கொள்கையை மறுத்தார். கடலின் ஏற்றம் வற்றம் முதலிய வற்றிற்குக் காரணம் பூமண்டலத் துருவங்களில் பனிப் பாறைகள் உருகுவதும் இறுகுவதுமேயாகும் என்றுர். அவருடைய சமூகக் கொள்கைகள் "உருசோ" (Rousseau) வின் கொள்கைகளைக் கண்ணீர் விடும் அளவிற்கு எளிதாகச் செய்வனவாகும். மனித சமுதாயத்தின் வீடுபேறு குறித்துப் பேசுங்கால் அறத்தையும் இன்பத்தையும் அச்சமுதாயத் தின் புறத்திலேயே காண்கிருர்.

ஆயினும், தம் கொள்கையை ஒரு நவீனத்தின் மூலம் விளக்குங்கால், அவர் ஓர் அருமையான படைப்பை அளிக் கிருர். "போலும் விர்ழினியும்" என்னும் நூலில் சூழ்ச்சி ஓரளவு சுவை குன்றியிருப்பினும், அவர் காலத்தவர் கேடு சூழ்தலில் முனைந்திருந்தனராயினும் அவருடைய தன்னே ரில்லா விளக்கமும் இயற்கை வருணனையும் அவர்களுக்கு இன்பமூட்டின. அவருடைய இயற்கை வருணனை மூான்- மூாக்-ருசோ வருணனைகளை விட ஓரளவு உணர்ச்சி குறைந்த தாயிருப்பினும், சரியானதாய், உருவகம் நிறைந்ததாய், பொருத்தமானதாயிருக்கிறது. நாட்டு நிலையை முன்கூட்டி உணர்த்துவார் போல் இவர் "ஷத்தோ பிரியா" னின் "அமெரிக்க நாட்டுப் பயணம்," "கிறித்துவத்தின் மேன்மை," முதலிய நூல்களை மக்களுக்கு அறிமுகப்படுத்து கிருர் எனலாம்.

இந்நிலவுலகில் எழுபத்தேழு ஆண்டுக் காலம் வாழ்ந்து, முடிவில் ஏரஞ்ஞி-சுய்ர்-உவாஜ் என்னும் ஊரில் 1814-ஆம் ஆண்டில் இப்பூவுலகை நீத்தார்.

# இந்தியக் குடிசை

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் **இலண்டன் மாநகரில்** ஆங்கிலக் கலைஞர்களின் சங்கம் ஒன்று நிறுவப்பட்டது. மன்பதை தெளிவடையவும், நல்வாழ்வு பெறவும், அச்சங்கம் உலகத்து எல்லாப் பாகங்களிலும் சென்று, கலைகள் எல்லாவற்றிலும் ஒளியைக் கண்டறிய முற்பட்டது. அச்சங்கத்துக்கு வேண்டும் செலவுகளுக்கு அந்நாட்டிலுள்ள ஈகையாளரைக் கொண்ட ஒரு கூட்டம் பண உதவி செய்து வந்தது. வணிகர்களும், பெருந்தனிகர்களும், சமயக் குருக்களும் சேர்ந்திருந்த அக்கூட்டத்தில் பல்கலைக் கழகங்களும், இங்கிலாந்து அரச குடும்பமும் பங்கு கொண்டன. வட ஐரோப்பாவிலுள்ள சில மன்னர்களும் அக்குழுவிற் கலந்து கொண்டார்கள். சங்கத்துக் கலைஞர் இருபதின்மர் ஆவர். இலண்டன் மாநகரத்து **அரச கழகம்,** அவர்களுள் ஒவ்வொருவருக்கும் விளக்கம் தேட வேண்டிய கேள்விகளைக் கொண்ட சுவடியொன்றைக் கொடுத்தது. அக்கேள்விகள் மூவாயிரத்து ஐந்நூறு. அவை ஒவ்வொரு பண்டிதருக்கும் வெவ்வேருயும், அவரவர் செல்ல வேண்டிய நாட்டிற்குப் பொருத்தமாயும் இருந்த போதிலும், ஒன்ருேடொன்று பிணிக்கப்பட்டனவாய், ஒன்றுக்கேற்பட்ட விளக்கம் மற்றவற்றிற்கு இன்றியமையாததாய் விளங்கின. அவைகளைத் தம் தோழர்கள் துணை கொண்டு செப்பஞ் செய்த **அரச கழகத்தின்** தலைவர், ஒரு சிக்கின் தெளிவு மற்ருென்றின் விளக்கத்தைச் சார்ந்துள்ளது என்பதையும், இவ்விளக்கத்துக்கு மற்ருெரு விளக்கம் ஆதாரமாயிருக்கிறது என்பதையும் நன்கு உணர்ந்திருந்தார். அஃது உண்மையை ஆராய்வதில், எண்ணியதை விட வெகு தொலைவில் கொண்டு செல்வதாயிற்று.

முடிவாக, தலைவர் கொடுத்திருந்த கட்டளைகளில் குறிப்பிட்ட வாக்கியங்களைக் கொண்டே சொல்ல வேண்டுமாயின், அது மக்கள் அறிவாற்றலின் அளவுக்கு இதுகாறும் எந்த நாடும் கட்டியிராத மிக அழகிய பல்கலைக் கட்டடமாகும். நானிலமெங்கும் சிதறிக் கிடக்கின்ற உண்மைகளை ஒருங்கு சேரச் செய்வதற்குக் கலைச் சங்கங்களின் அவசியத்தை அது நன்கு மெய்ப்பிக்கின்றதென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

பயணம் போகும் கலைஞர் ஒவ்வொருவருக்கும் தாம் விளக்கம் தேட வேண்டிய கேள்விகளைக் கொண்ட சுவடியன்றி, தம் வழிச் செலவின்போது "விவிலிய" நூலின் மிகப் பழைய படிகளையும் பல திறப்பட்ட அரிய கையேடுகளையும் வாங்கவும், அப்படி வாங்க இயலாவிடின், அவற்றினின்று எவ்வாறுகிலும் நல்ல பிரதிகளையேனும் பெற்று வரவும் கட்டளை இடப்பட்டிருந்தது. இதன் நிமித்தம் பொருளுதவியாளர்கள், கலைஞரெல்லாருக்கும் அவரவர் செல்லும் இடங்களில் காணக் கூடிய இங்கிலாந்து நாட்டின் ஆணையாளர், அமைச்சர், தூதர் முதலியவருக்கு அறிமுகச் சீட்டுகள் கொடுத்திருந்தார்கள். இன்னும் சிறப்பாக, இலண்டன் மாநகரத்துப் பேர் பெற்ற காசுக் கடைக்காரர்களால் பற்றெழுதப் பெற்ற தகுந்த உண்டியற் சீட்டுகளும் கொடுத்திருந்தார்கள்.

எல்லாக் கலைகளுக்கும் எல்லாச் சாத்திரங்களுக்கும் இருப்பிடமாயுள்ள இந்திய நாட்டுக்கு, ஈபுரு மொழி, அரபி மொழி, இந்திய மொழி முதலியவை அறிந்தவராயும், பண்டிதர்களுள் மிகவும் திறமை வாய்ந்தவராயும் இருந்தவர், தரை வழியாக அனுப்பப்பட்டார். அவர் முதன் முதல் ஆலந்து நாட்டு வழியாகச் செல்லலுற்றார்; ஆம்ஸ்டர்டாம் நகரத்தின் யூதர் சபையையும், தோர்திரஸ்து குருக்கள் கூட்டத்தையும் பார்வையிட்டார்; பிரான்ஸ் தேசத்தில் மறைச் சங்கத்தையும், பாரிசுக் கலைக் கழகத்தையும் கண்டார்; இத்தாலி நாட்டில் பல கலைச் சங்கங்களையும், காட்சிச் சாலைகளையும், நூல் நிலையங்களையும், சிறப்பாகப் புளோரான்ஸ் காட்சிச் சாலை

யையும், **வெனிஸ்** நகரத்து **சேன்மார்க்கு** நூல் நிலையத்தையும், **உரோமாபுரியில்** பாப்பாண்டவர் நூல் நிலையத்தையும் பார்வையிட்டார்; உரோமாபுரியில் இருக்கும்போது கீழ் நாடுகளை நோக்கிச் செல்லுவதற்கு முன் ஸ்பெயின் நாட்டுக்குப் போய், **சாலமாங்கு** நகரின் பெயர் பெற்ற பல்கலைக் கழகத்தைப் பார்க்கலாமா என அவர் மனம் ஊசலாடியது. ஆனால், **பதிதரைத் தேடி அடைக்கும் திருச்சங்கத்**தின் பயத்தினால், துருக்கித் தேசத்திற்கு நேரே போக விரும்பினர்; **கான்ஸ்தாந்தி நோப்பிளை** அடைந்தார். அங்கு அவரிடம் பணம் பெறுவதற்காகக் கண்காணிப்பாளன் ஒருவன், **சேந்து சோபிப் பள்ளி வாசலி**ன் எல்லா நூல்களையும் புரட்டிப் பார்க்க அவருக்கு வசதி செய்வித்தான்.

அவர் அங்கிருந்து புறப்பட்டு, **எகிப்து** நாட்டில் பழைய எகிப்தியர்களிடமும், அதன்பின் **லிபான் மலைக்** கிறித்தவர்களிடமும் **கர்மேல் மலைத்** துறவிகளிடமும் சென்றார். பின்னர் அராபி நாட்டுச் **சானு நகரை** அடைந்தார்; பின்னர் **இஸ்பகான், கந்தகார், தில்லி, ஆக்கிரா** முதலிய இடங்களுக்குப் போய், கடைசியாக மூன்றாண்டுப் பிரயாணத்துக்குப் பின் கங்கையாற்றங் கரையில், இந்தியாவின் **அத்தேன்** (கிரீஸ் தேசத்தின் பழைய சிறந்த நகரம்) ஆகிய காசிக்கு வந்தார்; அங்கு, பிராமணர்களோடு கலந்து உரையாடினர். அதன் தொடர்பாக அவர் சேமித்த பழைய நூல்கள், மூலப் புத்தகங்கள், அரிய கையேடுகள், படிகள், சுருக்கப் பிரதிகள், பல வகைக் குறிப்புக்கள் ஆகிய இவை எல்லாம் அதற்கு முன் எவரும் தொகுத்திராதபடி மிக ஏராளமாய் இருந்தன. அவை தொண்ணூறு மூட்டைகளில் ஒன்பதாயிரத்து ஐந்நூற்று நாற்பத்தைந்து பவுண்டு எடையுள்ளனவாய் இருந்தன என்று சொல்லுவதே சாலும். விளக்கம் தரக்கூடிய இத்தகைய பெருவாரியான பொருள்களோடு, அரச கழகத்தின் எண்ணங்களுக்கு மேலாகச் சேமித்தது பற்றிக் களிப்பு மீதூர அவர் இலண்டன் மாநகரத்துக்குப் புறப்படச் சித்தமாயிருந்தார். அப்பொழுது சாதாரண சிந்தனையொன்று அவரைத் துன்பத்திலாழ்த்தியது :

அவர் யூத சமயத் தலைவர்கள், புரோதெஸ்தாந்து அமைச்சர்கள், உலூத்தர் கோவில் கண்காணிப்பாளர், கத்தோலிக்குப் பண்டிதர்கள், பாரிசு நகரத்தின் கலை வல்லுநர்கள், குருஸ்கா, அர்க்காது முதலிய இத்தாலி நாட்டின் புகழ் பெற்ற பிற இருபத்து நான்கு கலைக் கழகங்கள், கிரேக்க சமயத் தலைவர்கள், துருக்கி முல்லாக்கள், அருமேனிய அறிஞர்கள், ஈரான் சமயத் தொண்டர்கள், காஜிகள், அராபிய ஷேக்குகள், பழைய பார்சிகள், இந்திய நீதிமான்கள் ஆகிய இவர்களோடு கலந்து பேசிய பின், அரச கழகத்தின் மூவாயிரத்து ஐந்நூறு கேள்விகளுள் ஒன்றுக்கேனும் விளக்கம் பெறுவதற்குப் பதிலாகத் தம் முயற்சிகளால் ஐயங்களே மல்கிப் பெருகினவென்று எண்ணினார். அக்கேள்விகள் ஒன்றோடொன்று தொடர்புடையனவாய் இருந்ததால், கழகத்தின் தலைவர் எண்ணியதற்கு மாறாக, ஒன்றுக்குரிய விளக்கத்தின் மயக்கம் மற்றொன்றினுடைய விளக்கத்தின் தெளிவை மாசுபடுத்துவதாயிற்று. மிகத் தெளிவான உண்மைகளெல்லாம் மிகச் சிக்கலாய் முடிந்தன. இத்தகைய விடைகளையும், மாறுபட்ட கோட்பாடுகளையும் கொண்ட இப்பெரிய சுழற்சியினின்று ஓர் உண்மையையேனும் பிரித்தறிவதும் கடினமாயிற்று.

பண்டிதர் இதனைப் பொதுத் தோற்ற அளவிலேயே மதிப்பிட்டுக்கொண்டார். அந்தக் கேள்விகளுள் ஈபுரு மக்கள் வேத நூலைப் பற்றிய இருநூறு கேள்விகளுக்கும், கிரேக்க கோவில், உரோமன் கோவில் முதலியவற்றின் பல திற ஒற்றுமைகளைப் பற்றிய நானூற்று எண்பது கேள்விகளுக்கும், பார்ப்பனர்களின் பழைய சமயத்தைக் குறித்த முந்நூற்றுப் பன்னிரண்டு கேள்விகளுக்கும், சம்ஸ்கிருதம் அல்லது தேவ மொழியைப் பற்றிய ஐந்நூற்று எட்டுக் கேள்விகளுக்கும், இந்திய குடிமக்களின் தற்கால நிலைமையைப் பற்றிய மூன்று கேள்விகளுக்கும், இந்தியாவில் ஆங்கிலேயரின் வாணிபம் குறித்த இருநூற்றுப் பதினொரு கேள்விகளுக்கும், பம்பாய்த் தீவுக்கு அண்மையிலுள்ள எலிபாந்தா, சல்சேத்துத் தீவுகளின் பழைய கட்டடங்களைப் பற்றிய எழுநூற்று இருபத்தொன்பது

கேள்விகளுக்கும், உலகத்தின் தொன்மையைப் பற்றிய ஐந்து கேள்விகளுக்கும், அம்பரின் மூலம் பல வகையான கோரோசனைகளின் தன்மைகள் ஆகிய இவைகளைப் பற்றிய அறுநூற்று எழுபத்து மூன்று கேள்விகளுக்கும், ஆறு மாதம் கிழக்கு நோக்கியும் ஆறு மாதம் மேற்கு நோக்கியும் ஓடுகின்ற இந்து மகா சமுத்திர நீரோட்டத்தின் இன்னும் ஆராயப் பெருத காரணங்களைப் பற்றிய ஒரு கேள்விக்கும், கங்கையாற்றின் ஊற்றுக்களையும் கால முறைப்படி ஏற்படும் அதன் வெள்ளங்களையுங் குறித்து முந்நூற்று எழுபத்தெட்டுக் கேள்விகளுக்கும் விடைகளைக் கண்டறிய வேண்டியிருந்தது. அது குறித்து, பல நூற்ருண்டுகளாக ஐரோப்பிய அறிஞர்கள் கவனித்து வந்த **நீலநதி**யின் ஊற்றுக்களையும் வெள்ளங் களையும் பற்றித் தம் வழிப் பயணத்தில் கிடைக்கக் கூடிய எதையும் பெற்று வருமாறு பண்டிதருக்குச் சொல்லப்பட் டிருந்தது. அவர் அப்பொருள் போதியபடி ஆராய்ந்து தீர்க்கப்பட்டதென்றும், மேலும் அது தாம் மேற்கொண்ட காரியத்துக்குப் புறம்பானதென்றும் தீர்மானித்துக் கொண் டார். ஆனல், **அரச கழகத்தார்** விடுத்த கேள்விகளுள் ஒவ்வொன்றுக்கும் ஐந்து விடைகளை அவர் பெறலானர். அவ்விடைகள் ஒன்று மற்ருென்றினுள் அடங்கியதாயும், பல திறத்தனவாயும் இருந்தன. எனவே, மூவாயிரத்து ஐந்நூறு கேள்விகளுக்கும் பதினேழாயிரத்து ஐந்நூறு விடைகள் ஏற்பட்டன. அவருடைய நண்பர் பத்தொன் பதின்மருள் ஒவ்வொருவரும் இத்தனை விடைகளைக் கொண்டு வருவராயின், **அரச கழகத்தார்** ஓர் உண்மையையேனும் உறுதியான அடிப்படையோடு நிலைநிறுத்த முயலுவதன்முன், மூன்று லட்சத்து ஐம்பதாயிரம் சிக்கல்களைத் தீர்க்கவேண்டி நேரும்.

இங்ஙனம் அவர்களுடைய தொகுதிகளெல்லாம், ஒவ் வொரு பொருளையும் அவர்களுக்குச் சொல்லப்பட்ட ஓர்வுக்கு முரணுக, ஒரு பொதுவான முடிவுக்குக் கொண்டு சேர்ப்பதை விடுத்து, அதற்கு மாருக ஒன்றை மற்ருென்றினின்றும் பிரித்து, அவற்றை ஒன்றிக்க முடியாதபடி செய்துவிடும்.

பண்டிதருக்கு இன்னொரு நினைவும் மிக்க துன்பத்தைத் தந்தது: அவர், தம் நீண்ட ஆராய்ச்சிகளில், தம் நாட்டினர்க்குரிய அமைதியையும் தம்மிடத்தில் சிறப்பாக உள்ள பணிவையும் கைக்கொண்டாராயினும், அவர் தருக்கம் புரிந்த பண்டிதர்களுள் பெரும்பாலார் அவருக்கு வலிய பகைவராயினர்.

"நான் என்னுடைய தொண்ணூறு மூட்டைகளில் உண்மைக்குப் பதிலாக, ஐயத்துக்கும் சச்சரவுக்கும் உரிய ஏதுக்களைக் கொண்டுபோவேனாயின், என் நாட்டாரின் ஓய்வு என்னாகும்?" என்று அவர் எண்ணினார்.

ஆதலின், வெறுப்பும் மலைவும் பெரிதும் கொண்டவராய், அவர் இங்கிலாந்துக்குப் பயணப்படும் தறுவாயிலிருந்தார். அப்பொழுது காசியிலிருந்த அந்தணர்கள், ஒரிசாக் கரையில் கடலோரத்தில், கங்கையாற்றின் கிளையொன்று கடலில் கலக்கும் இடத்துக்கு அண்மையில் அமைந்துள்ள ஜெகந்நாதம் என்னும் சிறந்த கோவிலின் தலைமை அந்தணர் ஒருவரே இலண்டன் மாநகரத்து அரச கழகத்தின் கேள்விகள் அனைத்துக்கும் விடையளிக்க வல்லவரென்பதை அவருக்குத் தெரிவித்தார்கள்.

அதற்கு முன் கேள்விப்பட்டிராத அவ்வளவு சிறந்த பண்டிதராய் அவ்வந்தணர் விளங்கினார். இந்தியாவின் எல்லாப் பாகங்களினின்றும், ஆசியாக் கண்டத்தின் அரசாங்கங்கள் பலவற்றினின்றும் பலர் அவரிடம் வந்து பேசி ஐயந் தெளிதல் உண்டு.

ஆங்கில பண்டிதர் உடனே கல்கத்தாவுக்குப் புறப்பட்டார்; அங்கு இந்திய நாட்டு ஆங்கில சங்கத்தின் தலைவரைக் கண்டார். அத்தலைவர் பண்டிதருக்குத் தம் நாட்டின் பெருமைக்காகவும் கலைகளின் மேன்மைக்காகவும், அவர் ஜெகந்நாதம் போவதற்குச் செந்நிறப்பட்டினால் மூடப்பெற்றதும், பொன்னிற மணிகள் பொதிந்த எழினியை உடையதுமான பல்லக்கொன்றும், அதனைச் சுமந்து செல்ல

வலிமையுடைய நான்கு ஆட்களும், அவ்வாட்களுக்கேற்ற மாற்ருட்களும், சுமைகளை எடுத்துச் செல்ல இரண்டு ஆட்களும், நீர் கொணர ஒருவனும், விடாய் தணித்துக் கொள்ள நீருள்ள கூம்பிய வாயினையுடைய மட்கலத்தைத் தாங்கி வர ஒருவனும், புகைக் குடிக் குழாயைக் கொண்டு வர ஒருவனும், வெயிலில் குடை பிடிக்கக் குடைதாங்கி ஒருவனும், இரவில் ஒளி செய்ய எரி பந்தம் தாங்குபவனொரு வனும், கோடரிக்காரன் ஒருவனும், சமையற்காரர் இருவரும், உணவுப் பொருள்கள் மூட்டை முடிச்சுகள் முதலியவற்றைக் கொண்டுபோக ஒட்டகங்கள் இரண்டும், அவற்றை ஓட்டு பவர்களும், வரவை அறிவிக்கும் ஏவலாளர் இருவரும், பாரசிகக் குதிரைகளின் மீதேறிப் பண்டிதரைச் சூழ்ந்துவர நான்கு காவலாளர்கள் அல்லது இரசபுத்திரர்களும், இங்கி லாந்து தேசத்துப் படைக்கலங்கள் பொறிக்கப் பெற்ற கொடியும், அதனைச் சுமக்க ஆள் ஒருவனும் தந்து அனுப்பினர்.

இந்த அழகிய பரிவாரங்களை நோக்கப் பண்டிதர் இந்திய நாட்டின் ஆங்கில சங்கத்தின் காரியக்காரரைப் போலக் காணப்பட்டார். ஆயினும், பண்டிதர் பரிசில் பெற்று வருவதற்கு மாருக, அதனைக் கொடுத்து வரவே சென்ருர் என்னும் வேறுபாடிருந்தது. இந்தியாவில் ஒருவர் சிறந்த நிலையிலுள்ள மற்றொருவரைக் காணச் செல்லுங்கால் வெறுங்கையோடு செல்வதில்லை. ஆகையால், சங்கத்தின் தலைவர் அவரிடம் தம் நாட்டின் செலவில் அந்தணத் தலைவ ருக்குக் கொடுப்பதற்காக அழகிய நச்சுக் குழலொன்றும், பாரசீக தேசத்து இரத்தினக் கம்பளம் ஒன்றும், அந்தணர் மனைவிக்கு எழிலமைந்த எழுத்துப் புடைவைகளும், அந்தணர் மாணுக்கர்களுக்குக் கச்சைகள் செய்வதற்காகச் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் நிறங்களில் சீன தேசத்து மெல்லிய பட்டுச் சீலை மூன்றும் கொடுத்தனுப்பினர். இந்தப் பரிசிற் பொருள்க ளெல்லாம் ஒட்டகங்கள் மீது ஏற்றப்பெற்றன. பண்டிதர் அரச கழகத்தின் புத்தகத்தை எடுத்துக்கொண்டு தம் பல்லக்கில் அமர்ந்து பிரயாணப்பட்டார்.

வழியில் அவர் ஜெகந்நாதத்து அந்தணத் தலைவரிடம் எப்பொருளைப் பற்றி முதன்முதல் பேசுவதென்பதை ஆராய்ந்துகொண்டு சென்றார்; 'கங்கையாற்றின் உற்பத்தியையும் அதன் வெள்ளங்களையும் பற்றிய முற்நூற்று எழுபத்தெட்டுக் கேள்விகளுள் ஒன்றைத் தொடங்குவதா, அல்லது இந்து மாகடலின் ஆண்டுக்கு இருமுறை மாறிமாறி வரும் நீரோட்டத்தைப் பற்றிய கேள்வியைத் தொடங்குவதா, அல்லது பூமண்டலத்தைச் சூழ்ந்துள்ள பேராழியின் ஊற்றுக்களையும், கால முறைப்படி ஏற்படும் அசைவுகளையும் பற்றிய கேள்வியைத் தொடங்குவதா?' என அவர் எண்ணிக்கொண்டு சென்றார். இக்கேள்விகள் இயற்கைப் பொருள் நூல் சம்பந்தமாக நீலநதியின் ஊற்றுக்களைப் பற்றியும் பெருக்குகளைப் பற்றியும் இத்தனை நூற்றாண்டுகளாக எழுந்தவற்றைப் பார்க்கிலும் மிகச் சிறந்தனவாய் இருப்பினும், ஐரோப்பிய அறிஞர்களின் கவனம் அவற்றின்பால் இதுகாறும் சென்றிலது. ஆகவே, அவர், 'பல பூசல்களுக்குக் காரணமாயிருக்கின்ற ஊழியின் விரிந்த தன்மையைக் குறித்து அவ்வந்தணரிடம் கேட்கலாம்' என்றும், 'அல்லது இன்னும் மேலே சென்று **ஏரோ தோத்து** என்பவரின் கூற்றுப்படி எகிப்துச் சமயாசாரியர்கள் மேற்கே உதித்துக் கிழக்கே சாய்கின்றதென்று முறைமுறையாய்ச் சொல்லி வருகின்ற பரிதி பல முறை தன் ஓட்டத்தை மாற்றிக் கொண்டது உண்மைதானா என்பதைக் கேட்கலாம்' என்றும், 'பல கோடி ஆண்டுகளாய் இருந்துவருகிறதென இந்தியர்கள் கூறும் பூமண்டலம் தோன்றிய காலத்தைப் பற்றிக் கேட்கலாம்,' என்றும் விரும்பினார். சில சமயம் ஒரு நாட்டுக்குத் தரவேண்டிய சிறந்த அரசியல் முறை சம்பந்தமாகவும், இதுவரையில் எங்கும் நூன் முறையில் ஏற்பட்டிராத மனித உரிமைகள் சம்பந்தமாகவும் ஆராய்தல் பயனாகுமென்றும் எண்ணினார். ஆனால், அவர் மேலும் எண்ணியதாவது: "இந்திய பண்டிதரிடம் எவ்வழியாக உண்மையை அறியலாம் என்று கேட்பதே தகுதியுடையது என்று எனக்குத் தோன்றுகிறது. ஏனெனில், இதுவரையில் நான் செய்ய முற்பட்டதைப் போல, அறிவைக் கொண்டு

உண்மையைத் தெளியலாம் எனின், அவ்வறிவு மனிதர்க ளுள்ளே பல திறத்ததாயிருக்கிறது. உண்மையை எங்குத் தேடவேண்டும் என்றும் அவரை நான் கேட்க வேண்டும். ஏனெனில், நூல்களிலே அதைத் தேடவேண்டின் நூல்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டனவாய் இருக்கின்றன. கடைசி யாக, மனிதரிடத்தில் உண்மையைக் கூறவேண்டுமா என்றும் கேட்கவேண்டும். ஏனெனில், அவர்களிடத்தில் அதனைச் சொன்ன மாத்திரத்திலேயே அவர்களோடு பிணங்க நேர்கிறது. இவை நம் மாண்புறு தலைவர் நினையா தனவும், முதன்முதல் ஆராய வேண்டுவனவுமாகிய மூன்று கேள்விகளாகும். ஜெகந்நாதத்து அந்தணர் இவற்றிற்கு விடை பகருவாராயின், எல்லாச் சாத்திரங்களுக்கும் திறவு கோல் எனக்குக் கிடைத்துவிடும். இன்னும் சிறப்பாக, எல்லாருடனும் யான் அமைதியாக வாழ்பவனுவேன்.''

இவ்விதமாகப் பண்டிதர் தமக்குள்ளே ஆராய்ந்து கொண்டிருந்தார். பத்து நாள் கடந்த பின் அவர் வங்காளக் குடாக் கடலின் கரையை வந்தடைந்தார். ஜெகந்நாதத்தி னின்று வரும் எண்ணற்ற மக்களை வழியிலே கண்டார். அவர்கள் தாங்கள் பார்த்துவந்த அந்தணத் தலைவரின் கலையறிவை வியந்து போற்றினுர்கள். பதினுேராம் நாள் விடியற்காலையில் ஜெகந்நாதத்தின் புகழ்வாய்ந்த கோயிலைக் கண்டார். அஃது கடற்கரையில் கட்டப்பெற்றதாய், சிவந்த மதிற்சுவர்களையும், மேல் தாழ்வாரங்களையும், கும் மட்டங்களையும், சலவைக் கற்களாலான கோபுரங்களையும் உடையதாய், நீண்டுயர்ந்திருந்தது. என்றும் பசுமையான மரங்களைக் கொண்ட ஒன்பது சாலைகளின் நடுவே அஃது அமைந்திருந்தது. அச்சாலைகள் ஒன்பதும், ஒன்பது அரசாங்கங்களை நோக்கினவையாகக் காணப்பட்டன. அவற்றுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை மரங்களைக் கொண்டதாயிருந்தது. பாக்கு, தேக்கு, தென்னை, மா, பனை, கருப்பூரம், மூங்கில், வாழை, சந்தனம் முதலிய மரங்கள் காணப்பட்டன. அச்சாலைகள் இலங்கை, கோல் கொண்டா, அரேபியா, பாரசீகம், திபேத்து, சீனம், ஆவா,

சயாம், இந்து மாகடலின் தீவுகள் முதலியவற்றை நோக்கிக் கொண்டிருந்தன. பண்டிதர் கங்கையாற்றுக்கும் அவ்வாறு கடலில் கலக்குமிடத்திலுள்ள அழகிய திடர்களுக்கும் அண்மையிலுள்ள மூங்கிற் சாலையினூடே சென்று, கோயிலை அடைந்தார். அக்கோவில் சமவெளியில் கட்டப்பட்டதாயினும், அஃது எவ்வளவு உயர்ந்திருந்ததென்றால், காலையில் கண்ட பண்டிதர் மாலையிலேதான் அதனை அணுகலானார். அருகில் வந்து அதன் மாண்பையும் பெருமையையும் கண்டபோது அவர் பெருவியப்புக் கொண்டார். அக்கோயிலின் செப்புக் கதவுகள், மாலைப் பரிதியின் சுடரினால் மின்னலைக் கான்றுகொண்டிருந்தன. வானத்தை அளாவி நிற்கும் அக்கோவிலின் சிகரத்தைச் சுற்றிப் பருந்துகள் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அக்கோவிலைச் சுற்றிச் சலவைக் கற்களாலாய பெரிய நீர் நிலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றின் தெளிந்த நீரினடியிலே கோவிலின் கும்மட்டங்கள், தாழ்வாரங்கள், கதவுகள் முதலியவற்றின் எதிர்ச் சாயல் காணப்பட்டது. நீர் நிலைகளைச் சுற்றிலும் அகன்ற முற்றங்களும் தோட்டங்களும் இருந்தன. அத் தோட்டங்களைச் சூழ்ந்து, கோயிலில் பூசனை புரியும் அந்தணர்கள் வசிக்கின்ற பெரிய கட்டடங்கள் காணப்பட்டன.

பண்டிதரின் பணியாட்கள் அவர் வரவை அறிவிக்க ஓடினார்கள். உடனே கோவிலின் இளம் பணிப் பெண்கள் ஒரு கூட்டமாகத் தோட்டமொன்றிலிருந்து புறப்பட்டு, இசைக் கருவிகளோடு பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் அவர் முன்னே வந்தார்கள். அவர்கள் கழுத்தில் மலர் மாலையும் இடையில் மலர்த் தொடையும் அணிந்திருந்தார்கள். பண்டிதர் அப்பெண்களின் நறுமணத்தாலும் ஆடலினாலும் இசையினாலும் சூழப் பெற்றவராய், கோயிலின் வாயிற்படி வரையில் வந்தார். அதனுள் பொன்னாலும் வெள்ளியாலும் அமைந்த பல விளக்குகளின் ஒளியில், உலகத்தைக் காப்பதற்காகச் சுமந்த காலையில் கையையும் காலையும் இழந்த காரணத்தால் ஆப்பு வடிவமாக அமைந்த

பிரமதேவனின் ஏழாவது அவதாரமாகிய ஜெகந்நாதரின் உருவச் சிலையைக் கண்டார். அச்சிலையின் அடியில், தலை நிலத்தைத் தொடும் வண்ணம் வணங்குகின்ற அடியார்கள் இருந்தார்கள். அவர்களுட் சிலர் உரத்த குரலில் அப்பிரம தேவனின் திருநாளிலே அவன் திருத்தேரில் தம் உடலைக் கொக்கியிட்டு மாட்டிக் கொள்வதாக ஆணை கூறினர். மற்றுஞ் சிலர் அவன் தேரடியிலே படுத்து நசுங்குவதாக உறுதி பகர்ந்தனர். இத்தகைய கொடிய உறுதி மொழிகளைக் கூறிக் கொண்டே ஆழ்ந்து நெட்டுயிர்ப்பெறியும் சமய வெறி கொண்டவர்களின் காட்சியானது, பண்டிதருக்கு ஒரு வித அச்சத்தைத் தந்ததாயினும், அவர் கோயிலுள் நுழைய எத்தனித்தார். அப்பொழுது வாயிற்படியிலிருந்த முதிய அந்தணர் ஒருவர், அவரை இடைமறித்து, அவர் வந்த தன் காரணத்தை உசாவினர். அக்காரணத்தை அறிந்து, அவர் **பரங்கி** அல்லது தூய்மையற்றவர் என்ற காரணத்தால், கோவிலின் நீர் நிலைகளுள் ஒன்றில் மும்முறை குளித்து, விலங்கு சம்பந்தமான பொருள்கள், சிறப்பாக அந்தணர் களால் போற்றப்படும் பசுவின் மயிர், அவர்களால் வெறுக்கப் படும் பன்றியின் மயிர் முதலிய எவையும் தம் மீது இல்லாத நிலையிலேதான் ஜெகந்நாதர் முன்னே அல்லது பெரிய குருவின் முன்னே செல்லுதல் கூடுமென்பதைப் பண்டிதருக் குத் தெரிவித்தார்.

"இதற்கென் செய்வேன்! அந்தணத் தலைவருக்கு வெகுமானப் பொருள்களாக **அங்கோரா** ஆட்டு மயிரினலாய பாரசீக விரிப்பு ஒன்றும், சீனத்துப் பட்டுகளும் கொண்டு வந்திருக்கின்றேனே!" என்றார் பண்டிதர்.

அந்தணர், "ஜெகந்நாதக் கோவிலுக்கோ, அக் கோவிலின் தலைமை மதாசாரியருக்கோ கொடுக்கப்படும் எப்பொருளும் அக்கொடையினலேயே தூய்மை பெறும். ஆயினும், உம் உடைகள் அத்தகையனவல்ல," என்று கூறினர்.

பண்டிதர் தாம் அணிந்திருந்த இங்கிலாந்து நாட்டுக் கம்பள மேற்சட்டையையும், ஆட்டுத் தோலினுலாய காற் பரடுகளையும், நீர் நாய் மயிரால் செய்யப்பட்ட தொப்பியையும் கழற்றிவிட நேர்ந்தது. அதன்பின் அவ்வந்தணர் பண்டி தரை மும்முறை குளிக்கச் செய்து, சந்தன நிறப் பருத்தி ஆடையொன்றை அவருக்கு உடுத்து, அந்தணத் தலைவர் இருக்கும் இடத்தின் வாயிலருகில் அழைத்துச் சென்றுர். பண்டிதர் அரச கழகத்தின் புத்தகத்தைத் தம் கையில் வைத்துக் கொண்டு உள்ளே நுழைய முயலும்போது, அவரை அழைத்துச் சென்ற அந்தணர் அப்புத்தகம் எப் பொருளால் மூடப்பட்டிருக்கிறதென்று அவரைக் கேட்டார். ‘பசுத் தோலினுல்’ என்று பகர்ந்தார் பண்டிதர். ‘‘என்னே! பசு அந்தணர்களால் போற்றப் பெறுவதென்பதை உமக்கு நான் முன்னமே சொல்லவில்லையா? அங்ஙனமிருக்க, பசுத் தோலினுல் மூடப் பெற்ற ஒரு புத்தகத்தோடு நீர் அந்தணர் களின் தலைவர் திருமுன்னர் வரலாமா?’’ எனக் கடிந்து கூறினுர் அவ்வந்தணர்.

பண்டிதர், இன்னலைத் தவிர்ப்பதற்கு அவ்வந்தண ருக்குச் சில வராகன்கள் அல்லது பொற்காசுகள் வெகுமான மாகத் தாராதிருந்தால் அவர் கங்கையாற்றுக்குப் போய்த் தம்மைத் தூய்மைப்படுத்திக் கொள்ள நேரிட்டிருக்கும். அவர் தம்முடைய பல்லக்கில் அப்புத்தகத்தை வைத்து விட்டார்; ‘‘அந்த இந்தியப் பேரறிஞரிடம் யான் கேட்க வேண்டிய கேள்விகள் மூன்றுதானே! ‘உண்மையை எவ் வழியாகத் தேட வேண்டும்? எங்கு அதனைக் காணலாம்? மனிதர்களுக்கு அதனைக் கூறலாமா?’ என்பவற்றிற்கு அவர் எனக்கு விடையளித்தால் அதுவே எனக்கு இன்பமாகும்,’’ எனத் தமக்குள்ளே சொல்லித் தம்மைத் தேற்றிக் கொண்டார்.

கிழ அந்தணர் ஆங்கில பண்டிதரைப் பருத்தி உடை யுடனும், வெற்றுத் தலையுடனும், வெறுங்காலுடனும், சந்தன மரத் தூண்களையுடைய விசாலமான ஒரு கூடத்திலிருந்த

ஜெகந்நாதத்தின் பெரிய சமயாசாரியாரிடம் அழைத்துச் சென்றார். அக்கூடத்தின் சுவர்கள், சுண்ணச் சாந்துடன் பசுஞ்சாணம் கலந்து பூசப்பட்டிருந்தன. ஆதலால், அவை பச்சை நிறமாகக் காணப்பட்டன. அன்றியும், அவை மிகவும் பளபளப்பாயும் வழு வழுப்பாயும் இருந்தன. ஆகையால், மக்கள் தங்கள் உருவங்களை அவற்றில் காணலாம். தரையின் மேல் ஆறடி நீளமும் ஆறடி அகலமும் உள்ள மெல்லிய பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன. கூடத்துக் கோடியில் சுற்றிலும் நூக்க மரத்தினாலாய கைப்பிடியோடு கூடிய மேடையொன்று அமைக்கப்பட்டிருந்தது. அம் மேடையின்மீது வந்தனைக்குரிய அந்தணத் தலைவரை வெள்ளைத் தாடியுடனும், அந்தணர் வழக்கப்படி மார்பில் அமைந்த முப்புரி நூலுடனும், இந்திய நாட்டு நாணல்களால் செய்யப்பெற்றுச் செந்நிறந் தீட்டிய ஒரு தட்டியின் ஊடே காணக்கூடியதாயிருந்தது. அத்தலைவர் மஞ்சள் நிற விரிப்பின் மீது சப்பணமிட்டு உட்கார்ந்திருந்தார். அவர் கண்களையும் இமையாமல் அசைவற்ற நிலையில் இருந்தார். அவர் மாணவர்களுட் சிலர், மயில் விசிறியினால் அவருக்கு விசிறிக் கொண்டிருந்தனர். மற்றுஞ் சிலர், வெள்ளிச் சிமிழ் களில் அகிற் புகையை எழுப்பிக் கொண்டிருந்தனர். வேறு சிலர், மிக இனிய முறையில் யாழ் வாசித்துக் கொண்டிருந் தனர். பல பக்கிரிகளும், யோகிகளும், மகம்மதியத் துறவி களும் கூடத்தின் இரு மருங்கிலும் பல வரிசைகளாய் அமர்ந் திருந்தார்கள். அவர்கள் கைகளைக் கட்டிய வண்ணம் நிலத்தைப் பார்த்துக் கொண்டு ஆழ்ந்த அமைதியிலிருந் தார்கள்.

பண்டிதர் தம் பாராட்டைத் தெரிவிக்க அந்தணத் தலைவர் அருகில் செல்ல எண்ணினார். ஆனால், அவரை அழைத்துச் சென்றவர், ஒன்பது பாய்களுக்கு அப்பாலேயே அவரை நிறுத்திவிட்டார். **உமாராக்கள்** என்னும் இந்தியப் பெருந்தகைகளும் அவற்றைக் கடந்து போவதில்லை யென்றும், இந்திய அரசர்கள் ஆறு பாய் அளவுதான் போவார்கள் என்றும், முகலாய இளவரசர்கள் மூன்று பாய்

அளவுதான் செல்லலாம் என்றும், முகலாய மன்னர் மாத்திரம் அந்தணத் தலைவர் அருகில் சென்று அவர் கால்களை முத்த மிட உரிமை பெற்றிருக்கிறுர் என்றும் தெரிவித்தார். இத் தறுவாயில் பண்டிதரின் ஆட்கள் கொண்டுவந்து வாயிற் படியில் வைத்த நச்சுக் குழாய், சீட்டித் துணி, பட்டுச் சீலை, விரிப்புகள் முதலியவற்றைப் பல அந்தணர் வந்து எடுத்துக் கொண்டுபோய் மேடையின் அருகிலே சேர்த்தனர். கிழ அந்தணர் அவற்றை ஏற்றுக்கொள்ளும் குறி எதுவுமின்றி நோக்கியதும், அவை உள்ளே எடுத்துச் செல்லப்பட்டன.

ஆங்கில பண்டிதர் இந்திய மொழியிலே மிக அழகிய பேச்சொன்று தொடங்க எத்தனித்தார். அப்பொழுது அவருடனிருந்த அந்தணர் அவருக்குப் பெரிய குரு கேட்குந் தனையும் காத்திருக்க வேண்டுமென்று கூறினுர்; அவரை, நாட்டு வழக்கப்படி ஒரு தையற்காரன் உட்காருவது போலக் கால்களை மடக்கிச் சப்பணம் போட்டு உட்காரச் செய்தார். பண்டிதர் இத்தனை சடங்குகளைக் குறித்து முணுமுணுக்க லானுர். ஆனுல், உண்மையைத் தேட இந்தியாவுக்கு வந்த பின் அவ்வுண்மையைக் காண்பதற்காகச் செய்யத் தகாதது யாதுளது?

பண்டிதர் உட்கார்ந்தவுடன் இசை நின்றது. பின் சில நாழிகை ஆழ்ந்த அமைதியிலிருந்து அந்தணத் தலைவர், பண்டிதர் ஜெகந்நாதத்திற்கு வந்ததன் காரணம் யாதெனக் கேட்கச் செய்தார்.

ஜெகந்நாதத்தின் பெரிய குரு இந்திய மொழியிலே, கூட்டத்தின் ஒரு பகுதிக்குக் கேட்கும் வண்ணம் போதிய தெளிவுடன் பேசினும், அவர் பேச்சை ஒரு பக்கிரி மற்ருெரு பக்கிரிக்குச் சொல்ல, அவர் மூன்ருமவருக்குச் சொல்ல, பின்னர் அவரால் அது பண்டிதருக்குச் சொல்லப்படுவதா யிற்று. பண்டிதர் புகழ் வாய்ந்த அந்தணத் தலைவரிடம் உண்மையை எவ்வழியாகக் கண்டறியலாம் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகவே தாம் ஜெகந்நாதத்திற்கு வந்ததாக அவ்விந்திய மொழியிலேயே பதிலிறுத்தார்.

அதற்கு அம்முதிய அந்தணத் தலைவர் சிறிது நேரம் சிந்தனை செய்து, 'அந்தணர்கள் வழியாகத்தான் உண்மை அறியப்படும்,' என்று பகர்ந்தார். அப்பொழுது அவையி லிருந்தாரனைவரும் அவர் விடைக்கு வியந்து தலை வணங் கினர்.

ஆங்கில பண்டிதர், 'உண்மையை எங்குப் போய்த் தேட வேண்டும்?' என வினவினர். அதற்கு இந்தியப் பண்டிதர், "இலட்சத்து இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வட மொழியில் எழுதப்பட்ட நான்கு வேதங்களிலே எல்லா உண்மைகளும் அடங்கிக் கிடக்கின்றன. அவை களின் நுட்பம் அந்தணர்களுக்குத்தான் தெரியும்," என்றார்.

இம்மொழிகளைக் கேட்டுக் கூட்டத்தில் அமர்ந்திருந் தவர் அனைவரும் கைதட்டி ஆரவாரித்தனர்.

ஆங்கில பண்டிதர் அமைதியாக ஜெகந்நாதத்துப் பெரிய குருவுக்குப் பின் வருமாறு பகரலுற்றார்: "அந்த ணர்கள் மாத்திரம் நுட்பத்தை உணரக் கூடிய நூல்களிலே கடவுள் உண்மையைப் பொதிய வைத்தாரென்றால், அந்த ணர்கள் இருக்கின்றார்கள் என்பதைக் கூடத் தெரியாம லிருக்கின்ற பெரும்பாலான மக்கள், அவற்றை அறியக் கூடா தென்று ஆண்டவன் மறுத்திருப்பதாக ஏற்படுகிறதன்றோ? அப்படியாயின் ஆண்டவன் நேர்மையானவனல்லன்."

"பிரமாவின் விருப்பமே அவ்வாருகும். அவர் விருப் பத்திற்கு மாறு செய்ய எவராலும் முடியாது," என்று மறுத் துரைத்தார் அந்தணத் தலைவர்.

அவையிலிருந்தார் பின்னும் மிகுதியாகக் கை தட்டி ஆரவாரித்தனர்.

அவ்வாரவாரம் அடங்கியவுடன், ஆங்கிலேயர் தம் மூன்ருவது கேள்வியை வெளியிட்டார். "உண்மையை மக்கட்குத் தெரிவித்தல் வேண்டுமா?" என்றார்.

"எல்லாருக்கும் அதை மறைப்பது பெரும்பாலும் நன்று. ஆனால், அதை அந்தணர்களுக்கு வெளியிடுவது ஒரு கடமையாகும்," என்று மொழிந்தார் முதிய பண்டிதர்.

ஆங்கில பண்டிதர் சினந்து, "என்ன! உண்மையை எவருக்கும் சொல்லாத அந்தணர்களுக்கு அதனைச் சொல்ல வேண்டுமா? உண்மையில் அந்தணர்கள் நேர்மையற்றவர்களே," என்றார்.

இம்மொழிகளைக் கூறினதும் அவையில் ஒரு பெருங் குழப்பம் உண்டாயிற்று. கடவுள் நேர்மையற்றவன் என்று சொன்னபோது முணுமுணுக்காமல் கேட்டுக்கொண்டிருந்த அவையினர், அந்நிந்தை தங்கள் பால் வந்தபொழுது, அவ்வாறு கேட்டுக்கொண்டிருக்கவில்லை. பண்டிதர்கள், பக்கிரிகள், முகம்மதியத் துறவிகள், யோகிகள், அந்தணர்கள், அவர்கள் மாணவர்கள் முதலிய எல்லாரும் ஆங்கில பண்டிதரிடத்தில் ஒரே காலத்தில் தருக்கிக்க முற்பட்டார்கள். ஆனால், ஜெகந்நாதத்தின் பெரிய குரு கையைத் தட்டி, 'அந்தணர்கள் ஐரோப்பிய பண்டிதரிடத்தில் தருக்கித்தலே கூடாது,' என்று தெளிந்த குரலிலே கூறிச் சந்தடியை அடங்கச் செய்து, அவ்விடத்தை விட்டு எழுந்து அப்புறஞ் சென்றார். அவையிலிருந்தோர் அனைவரும் வாழ்த்தொலி செய்தனர்; ஆங்கில பண்டிதரைக் குறித்து வெளிப்படையாக முணுமுணுத்தனர். தங்கள் குருவின் ஆணையில்லாமலிருந்தால் அவர்கள், கங்கைக் கரைகளில் மிகுந்த செல்வாக்குடனிருக்கும் ஆங்கிலேயர்களுக்கும் அஞ்சாமல், அவ்வாங்கில பண்டிதருக்கு ஏதேனும் ஒரு தீங்கும் செய்திருப்பார்கள்.

பண்டிதர் அவையை விட்டு வெளியே வந்தார். அப்பொழுது அவரை அழைத்து வந்தவர் அவரை நோக்கி, "எங்கள் மாண்பு மிக்க மதக் குரு, வழக்கப்படி தங்களுக்குப் பானகம், வெற்றிலை, நறுமணச் சாந்து முதலியவை கொடுத்திருப்பார். ஆனால், நீங்கள் அவருக்குக் கோபத்தை உண்டாக்கி விட்டீர்கள்," என்றார்.

"வீண் வருத்தங்கள் கொண்ட நானல்லவோ கோபங் கொள்ள வேண்டும்? உங்கள் தலைவர் வருந்த வேண்டுவ தில்லையே!" என மறுத்துரைத்தார் பண்டிதர்.

அவரை அழைத்து வந்தவர் மீண்டும், "என்னே! நீங்கள் அவருக்கு மாருகத் தருக்கிக்க எண்ணலாமா? அவர் வாக்கு இந்தியாவின் திருவாக்கு என்பதையும், அவர் சொல்லும் வார்த்தை ஒவ்வொன்றும் அறிவுச் சுடர் என்பதையும் நீங்கள் அறிவீர்களோ?"

"அதுபற்றி நான் ஒரு பொழுதும் ஐயங்கொள்ளேன்," என்று சொல்லி, பண்டிதர் தம் மேற் சட்டையையும், காற் பரடுகளையும், தொப்பியையும் எடுத்துக்கொண்டார். காற்றும் மழையும் வரும் போலக் காணப்பட்டது. இரவும் நெருங் கிற்று. கோவிலின் ஓர் இடத்தில் இரவைக் கழிக்க விரும்பினர். அவர் "பரங்கி" என்ற காரணத்தால் அங்குப் படுக்கை மறுக்கப்பட்டது. நடந்த நிகழ்ச்சி அவருக்கு நீர் வேட்கையை மிகுதியும் உண்டாக்கிவிட்டது. அருந்த நீர் கேட்டார். வாய் குறுகிய ஒரு மட்பாண்டத்தில் நீர் கொண்டுவந்து தரப்பட்டது. அவர் அதை அருந்தியவுடனே அம்மட்பாண்டம் உடைக்கப்பட்டுவிட்டது. அவர் பரங்கி யாய் இருந்து, அதனை வாங்கித் தாமே குடித்ததால் அதனை மாசுபடுத்தி விட்டார் என்பதற்காகவே அது உடைக்கப்பட்டு விட்டது. அப்பொழுது பண்டிதர் வெகுண்டு, கோவிலின் வாயிற்படிகளிலே நெடுங்கிடையாய்க் கிடந்து வணங்கிக் கொண்டிருந்த தம் ஆட்களை அழைத்தார். பின்பு தம் பல்லக்கில் ஏறிக்கொண்டு, வானம் மேகத்தால் மூடியிருக்க, இருள் தொடங்கும் வேளையில், கடற்கரையிலுள்ள மூங்கில் சாலை வழியாகப் புறப்பட்டுப் போய்க்கொண்டே தமக்குள் பின் வருமாறு எண்ணலானர்:

"இந்திய முதுமொழி முற்றும் உண்மைதான்; இந்தியா வுக்கு வரும் ஐரோப்பியன் எவனும் பொறுமை இல்லாதவ னயின், அதனை அங்குப் பெற்றுக்கொள்ளுகிருன். பொறுமை

உடையவனுயின், அதனை அங்கு இழந்துவிடுகிருன். என்னைப் பொறுத்தமட்டில் என் பொறுமையை யான் இழந்து விட்டேன். என்னே! 'உண்மையை எவ்விதமாகத் தெரிந்து கொள்வது? எங்கு அதனைத் தேட வேண்டும்? அதனை மக்கட்குச் சொல்ல வேண்டுமா?' என்பனவற்றிற்கு யான் விடை அறிவதற்கில்லை. இந்நிலவுலகம் முழுதும் மனிதன் தவறுகளுக்கும் சச்சரவுகளுக்குமே ஆளாக்கப்பட்டிருக் கிருன். அந்தணர்களைக் கேட்டுத் தெளிய இந்தியாவுக்கு வந்ததன் பயன் இதுதானே?''

பண்டிதர், தம் பல்லக்கில் இவ்விதமாக ஆராய்ந்து கொண்டு செல்லுங்கால், இந்தியாவில் சூறைக் காற்று என்று வழங்கப்படும் ஒரு பெருங்காற்று எழுந்தது. காற்று கடலினின்று வந்து கங்கையாற்றின் நீரைப் பின்னடையச் செய்து, அதனை அவ்யாற்றின் கழி முகத்திலுள்ள திடர்களின் மீது நுரை தோன்ற மோதிற்று. அக்காற்று ஆற்றின் கரை களினின்று மணற் பிழம்புகளை எழுப்பியும், அவற்றின் காடு களினின்று இலைத் திரள்களைக் கிளப்பியும் அலங்கோலமாக ஆற்றினூடேயும், நாட்டுப்புறங்களினூடேயும் வானளாவக் கொண்டு சென்றது. சில சமயம் அது மூங்கிற்சாலை யினுள்ளே அமிழ்ந்து போகும். அவ்விந்தியக் கொறுக்கைகள், பெரிய மரங்களைப் போல நீண்டுயர்ந்திருப்பினும், அக் காற்றினுல் பசும்புல் நிலத்துப் புற்களைப்போல அசையும். துகள்களும் இலைகளும் சேர்ந்த சுழல்களினூடே திரைகின்ற நீண்ட அம்மூங்கிற்சாலை காணப்படும். அதன் ஒரு பகுதி வலப்புறமும் இடப்புறமுமாக நிலத்தைத் தீண்டும் வண்ணம் கவிழும். மற்றொரு பகுதி பேரிரைச்சலோடு நிமிரும். பண்டி தரின் ஆட்கள் அவற்றினுல் நசுக்குண்டு விடுவோமென்றோ, அல்லது கரைகளைக் கடந்து பெருக்கெடுத்து வரும் கங்கை யாற்றின் நீரிலே அமிழ்ந்து விடுவோமென்றோ அஞ்சி வயற் புறமாக நடந்து, அடுத்துள்ள மேடான இடங்களின் பக்கமாகக் குறிக்கோளின்றிச் சென்றூர்கள். அப்பொழுது இருளும் வந்தது. காரிருளில், செல்வது எங்கெனத் தெரியாமல் மூன்று மணி நேரம் நடந்த பின் மேகங்களைப்

பிளந்துகொண்டு அடிவானம் முற்றும் வெண்மையாம்படி மின்னல் ஒன்று தோன்றிற்று. அம்மின்னலொளியில் அவர்களுக்கு வலப்புறமாக மிகவும் சேய்மையில் ஜெகந்நாதத்தின் கோவிலும், கங்கையாற்றின் திடர்களும், அலை வீசும் கடலும், மிகவும் அண்மையில் அவர்களுக்கு எதிரே இரு குன்றுகளுக்கிடையே ஒரு பள்ளமும், காடு ஒன்றும் காணப்பட்டன. அவர்கள் அங்கு ஒதுங்க ஓடினார்கள். பள்ளத்தின் வாயிலில் வரும்பொழுது துன்பத்துக்கேதுவான இடிகள் குமுறிக் கொண்டிருந்தன. அப்பள்ளம் கற்பாறைகளை உடையதாய், மிகப் பருத்த பழைய மரங்கள் நிறைந்ததாய் இருந்தது. அம்மரங்களின் உச்சியைப் புயற் காற்று அச்சந் தரத்தக்க பேராரவாரத்துடன் குனியச் செய்தும், அவற்றின் அடிமரங்கள் அடுத்துள்ள கற்பாறைகளைப் போல் அசையாமலிருந்தன. அப்பழங் காட்டின் இப்பகுதி, ஓய்வுக்குப் புகலிடம் போலக் காணப்பட்டது. ஆனால், அதனுள் நுழைவது அரிதாயிற்று. காட்டின் ஓரத்தில் உள்ள பிரப்பங் கொடிகள் வளைந்து வளைந்து அங்குள்ள மரங்களின் அடியைச் சுற்றிக் கொண்டும், படர் கொடிகள் ஒரு மரத்தினின்று மற்றொரு மரத்திற்குத் தாவிப் படர்ந்தும் இருந்தமையால், எப்பக்கமும் அவை பச்சிலைகளாலாய அரண்போன்று இருந்தன. அவ்வரணில் சில தழைக் குகைகள் காணப்படினும், அவற்றினுள் புக வழியே இல்லை. ஆயினும், இரசபுத்திரர்கள் தங்கள் வாட்களால் ஒரு வழி திறந்து விடவே, பின்னிருந்தாரனைவரும் பல்லக்குடன் உள்ளே நுழைந்தனர். காற்றுக்குப் பாதுகாப்பிடமென்று அதனை அவர்கள் நினைந்திருந்தபொழுது, மிகுதியாகப் பெய்த மழை அவர்களைச் சுற்றிலும் ஆயிரம் நீர்த் தாரைகளை உண்டாக்கிற்று. இக்கலக்கமான நிலைமையில் அவர்கள் மரங்களுக்கு அடியில், பள்ளத்தின் மிகக் குறுகிய இடத்தில், வெளிச்சத்தையும் ஒரு குடிசையையும் கண்டார்கள். பந்தம் தாங்குபவன் தன் பந்தத்தைக் கொளுத்த அங்கு ஓடினான்; சிறிது நேரஞ் சென்று பெருமூச்சுடன் திரும்பி வந்து "குடிசையின் அருகே செல்லாதீர்கள், அதிற் பறையன் ஒருவன் இருக்கிறான்!" எனக் கூவினான். கூட்டத்தாரனை

வரும் அச்சத்துடன், "பறையனு! பறையனு!!" எனக் கத்தினர்.

ஆங்கில பண்டிதர், அவர்கள் ஏதோ காட்டு விலங்கைப் பற்றிப் பேசுவதாக நினைத்துத் தம் கைத்துப்பாக்கியை எடுத்தார்; பந்தம் தாங்குபவனை நோக்கி, "பறையன் என்பதற்குப் பொருள் என்ன?" என்று வினவினுர். அவன், "நம்பிக்கையும் சட்டமும் இல்லாதவன் என்பது," என்று பதிலிறுத்தான்.

இரசபுத்திரர்களின் தலைவன், "பறையனென்பவன் மிக இழிவான குலத்தைச் சேர்ந்த இந்தியன். அவனுல் தீண்டப்பட்ட மாத்திரத்திலேயே அவனைக் கொன்று விடுவதற்கு அனுமதியுண்டு. அவனில்லத்தில் நாம் நுழைந்துவிட்டால், ஒன்பது பிறையளவும் நாம் எக் கோவிலுள்ளும் நுழைய முடியாது. நம்மைத் தூய்மைப் படுத்திக்கொள்ள ஒன்பது முறை கங்கையில் முழுக வேண்டும். அத்தனை முறை ஓர் அந்தணர் கையினுல் பசு மூத்திரத்தைக் கொண்டு தலை முதல் கால் வரையில் கழுவிக் கொள்ள வேண்டும்," என்ருன்.

இந்தியர் அனைவரும், "நாங்கள் ஒரு பறையன் வீட்டில் நுழையமாட்டோம்," என்று கூக்குரலிட்டார்கள்.

பண்டிதர் அப்பொழுது பந்தம் தாங்குபவனை நோக்கி, "என்ன வியப்பு! உன் தேயத்தான் நம்பிக்கையும் சட்டமும் அற்றவனென்பதை நீ அறிந்து கொண்டாயா?" என்று வினவினுர்.

பந்தம் தாங்குபவன், "நான் அவன் குடிசையைத் திறந்த போது, அவன் தன் நாயுடனும் மனைவியுடனும் ஒரே பாயில் படுத்திருந்ததையும், அவள் குடிப்பதற்குப் பசுக் கொம்பில் அவன் நீர் கொடுத்ததையும் கண்டேன்," என்று கூறினுன்.

பண்டிதரைச் சூழ்ந்து வந்தார் அனைவரும், ''நாங்கள் பறையன் வீட்டில் நுழையவே மாட்டோம்,'' என்று மீண்டும் கூறினர்.

ஆங்கில பண்டிதர், ''வேண்டுமானால் நீங்கள் இங்கேயே இருங்கள். என்னை மழையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள இந்தியாவிலுள்ள எல்லாக் குலங்களும் எனக்கு ஒன்றே,'' என்று பகர்ந்தார்.

இவ்வாறு கூறிக்கொண்டே அவர் தம் பல்லக்கினின்று கீழே குதித்தார்; தம் கேள்விச் சுவடியையும், இரவுப் பையையும் கக்கத்திலடக்கிக் கொண்டு, கையில் கைத் துப்பாக்கியையும், புகைக் குடிக் குழாயையும் எடுத்துக் கொண்டார்; தன்னந்தனியே குடிசையின் வாயிலை அடைந்து, கதவைத் தட்டினார். உடனே மிக இனிய தோற்றமுடைய ஒருவன் கதவைத் திறந்தான். ஆங்கில பண்டிதரைக் கண்டதும் அவன் ஒதுங்கி நின்று ''ஐயரே நான் ஓர் ஏழைப் பறையன். நான் உங்களை வரவேற்குந் தகுதியுடையவனல்லேன். என் குடிசையில் மழைக்குத் தங்க நீங்கள் நினைப்பீர்களாயின், அஃது எனக்குப் பெரிதும் மேன்மையைத் தருவதாகும்,'' என்றான்.

ஆங்கில பண்டிதர், ''சகோதரனே, உன் விருந்தோம்பலை நான் மனமார ஏற்றுக் கொள்ளுகிறேன்!'' என்றார்.

பறையன் கையில் ஒரு பந்தம் ஏந்தி, முதுகில் காய்ந்த விறகுச் சுமையைத் தாங்கி, தேங்காய்களும் வாழைப் பழங்களும் நிறைந்த ஒரு கூடையைக் கக்கத்தில் அடக்கிக் கொண்டு, சிறிது தொலைவில், ஒரு மரத்தினடியிலே இருந்த பண்டிதரின் ஆட்களினருகே சென்று, தான் கொண்டு வந்த பொருள்களைக் கீழே வைத்து, ''ஐயன்மார்களே, என் இல்லத்தில் நுழைந்து எனக்கு மேன்மையைத் தர நீங்கள் விரும்பாவிட்டால், தோலினால் மூடப்பட்ட இந்தக் காய்கனிகளையேனும் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் மாசுரு

வண்ணம் இவற்றை உண்ணலாம். நீங்கள் குளிரைப் போக்கிக் கொள்ளவும் புலிகளினின்று தப்பவும் இதோ நெருப்பு இருக்கிறது. ஆண்டவர் உங்களைக் காக்கட்டும்!'' என்று வணக்கமாகக் கூறினான்.

பிறகு அவன் தன் குடிசைக்குத் திரும்பி வந்து பண்டிதரை நோக்கி, ''ஐயரே, மீண்டும் சொல்லுகிறேன்: நான் ஆதரவற்ற பறையன்தான். ஆனால், உங்கள் உடலின் வெண்ணிறத்தாலும் உடைகளாலும் நீங்கள் இந்தியர் அல்லர் என்று எனக்குத் தோன்றுவதால், உங்கள் எளிய அடிமையாகிய நான் கொடுக்கும் உணவுகளை நீங்கள் வெறுக்க மாட்டீர்களென்று நினைக்கிறேன்,'' எனக் கூறித் தரையில் விரித்திருந்த ஒரு பாயின்மேல் மாங்கனிகளையும், சீத்தாப் பழங்களையும், நெருப்பில் சுட்ட பெருவள்ளிக் கிழங்குகளையும், சக்கரைவள்ளிக் கிழங்குகளையும், வாழைக் கனிகளையும், தேங்காய்ப் பாலும் சர்க்கரையுங் கலந்த சோறு நிறைந்த கலயம் ஒன்றையும் வைத்துவிட்டுப் போய்த் தன் பாயில் தன் மனைவியின் அருகில் அமர்ந்தான். அவளருகில் தொட்டிலில் குழந்தை தூங்கிக்கொண்டிருந்தது.

ஆங்கில பண்டிதர், ''அறமுணர்ந்தவனே, நீ என்னிலும் சிறந்தவன். ஏனெனில், உன்னை வெறுப்பவர்களுக்கும் நீ நன்மை செய்கிறாய். நீ இந்தப் பாயிலேயே வந்து அமர்ந்து எனக்கு மேன்மையைச் செய்யாவிடில், நீ என்னைத் தீயவனென்று கருதுவதாக நினைப்பேன். ஆகவே, யான் மழையால் நனைவதாயினும், புலிகளால் கொல்லப்படுவதாயினும் இக்கணமே உன் குடிசையை விட்டு வெளியே சென்றுவிடுவேன்,'' என மொழிந்தார்.

விருந்தாளி இருந்த பாயிலேயே பறையனும் வந்து அமர்ந்தான். இருவரும் உண்ணத் தொடங்கினர். அப்பொழுது புயற்காற்றின் நடுவே, பாதுகாப்பான இடத்திலிருப்பதனாலாய இன்பத்தைப் பண்டிதர் நுகர்ந்துகொண்டிருந்தார். குடிசை அசையாது நின்றது. அது பள்ளத்தின்

மிகக் குறுகிய இடத்தில் அமைந்திருந்ததோடு, ஓர் ஆல மரத்தின் அடியிலே கட்டப்பட்டிருந்தது. அம்மரத்தின் கிளைகளினின்று கற்றைக் கற்றையாக இறங்கும் விழுதுகள், பல வளைவுகள் அமைந்தாற் போல நடுமரத்தைத் தாங்கிக் கொண்டிருந்தன. அம்மரத்தின் இலைகள் தடித்திருந்தமையினுல், ஒரு துளி மழையும் கீழே இறங்கவில்லை. பெருங் காற்று அஞ்சத் தக்க பேரொலியை இடையிடையே இடி முழக்கத்தோடு எழுப்பிக் கொண்டிருப்பினும், கூரையின் நடுவில் வெளிச் செல்லுகின்ற அடுப்பின் புகையும் விளக்கின் வெளிச்சமும் கலக்கமுறவில்லை. இந்தியனும் அவன் மனைவியும் கொண்டிருந்த அமைதியைக் கண்டு பண்டிதர் வியந்து கொண்டிருந்தார். அவ்வமைதி இயற்கையின் கூறுபாடுகளைக் காட்டிலும் மிக ஆழ்ந்ததாயிருந்தது. அவர்கள் குழந்தை நூக்க மரம் போலக் கறுப்பாகவும் பளபளப்பாகவும் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தது. யானைக் குன்றிமணிகளால் அக்குழந்தைக்குக் கழுத்தணியொன்றை வேடிக்கையாகச் செய்து கொண்டே அதன் தாய் தன் காலினுல் தொட்டிலை அசைத்துக் கொண்டிருந்தாள். தந்தை தன் அன்பு நிறைந்த பார்வையை மாறி மாறிக் குழந்தை மீதும் தாய் மீதும் செலுத்திக் கொண்டிருந்தான். இப்பொது இன்பத்தில் நாயும் பங்கு கொண்டது. அது நெருப்புக்கருகில் ஒரு பூனையோடு படுத்து தன் கண்களை அவ்வப்போது அரைகுறையாகத் திறந்து கொண்டும், தன் தலைவனைப் பார்த்துப் பெருமூச்செறிந்துகொண்டும் இருந்தது.

ஆங்கிலேயர் உண்டு முடிந்ததும் பறையன் அவர் புகைக் குடிக் குழாயைப் பற்ற வைக்க ஒரு கொள்ளிக் கட்டையை அவரிடம் தந்தான். தானும் தன் புகைக் குடிக் குழாயைப் பற்ற வைத்துக் கொண்டு, தன் மனைவிக்குச் சாடை காட்டினுன். அவள், இரு கிண்ணங்களில் இளநீரும், இரவு உணவின் போது நீரும் சாருயமும் எலுமிச்சம் பழப் பிழியலும் கருப்பஞ்சாறும் கலந்து தான் செய்த ஒரு வகைப் பானம் நிறைந்த பெரிய குடுக்கை ஒன்றும் கொண்டு வந்து பாயின் மேல் வைத்தாள்.

பண்டிதரும் பறையனும் மாறி மாறிப் புகை குடித்துக் கொண்டும், பானம் அருந்திக் கொண்டும் இருக்கும் பொழுது பண்டிதர் பறையனை நோக்கி, "நான் இது வரையில் பார்த்திராத மிக்க இன்ப வாழ்வுடையார்களுள் நீயும் ஒருவனென்றெண்ணுகிறேன். ஆதலால், பெரிய அறிஞர்களுள் நீயுமொருவனுவாய். உன்னைச் சில கேள்விகள் கேட்க அனுமதி தருவாயா? இத்தகைய கொடிய காற்றில் இவ்வளவு அமைதியாக நீ எவ்வாறு இருக்கிருய்? ஒரு மரமே உனக்குக் காப்பிடமாயிருக்கிறது. மரங்கள் இடியை இழுக் கின்றனவே!" என்று வினவினர்.

**பறையன்:** ஒரு போதுமில்லை; ஆலமரத்தின் மீது என்றும் இடி விழுந்ததில்லை.

**பண்டிதர்:** இது என்ன பெருவிந்தை! அலரியைப் போல இதற்கும் தள்ளும் மின்சக்தி உண்டு போலும்!

**பறையன்:** நீங்கள் சொல்லுவது எனக்கு விளங்கவில்லை; பிரமன் ஒரு நாள் இம்மரத்தின் கீழ்த் தங்கியது காரணமாக இதன் மீது இடி விழுவதில்லை என்று என் மனைவி நினைக்கிருள். பெருங் காற்றுக்குப் பாதுகாப்பிடமாக மக்கள் தங்குவதற் கெனவே, தடித்த இலைகளையும் விழுதுகளையும் ஆலமரத் திற்குக் கடவுள் ஏற்படுத்தியிருப்பதால், இத்தகைய காற்ற டிக்கும் பருவங்களில் அம்மக்கள் இடியினுல் தாக்கப்படக் கூடாதென்பது அவர் விருப்பம் என்று நான் கருதுகிறேன்.

**பண்டிதர்:** உன் மறுமொழி பெரிதும் சமயச் சார்பினதா யிருக்கிறது. கடவுள் நம்பிக்கையே உனக்கு அமைதியைத் தருகின்றது. கடவுளிடத்துள்ள அன்பே சாத்திரங்களைக் காட்டிலும் மிகுந்த தேறுதலைத் தருகிறது. நீ எந்நெறியைச் சார்ந்தவனென்பதைத் தெரிவிக்க வேண்டும். ஏனெனில், ஓர் இந்தியன்கூட உன்னேடு தொடர்பு கொள்ள விரும்பாமை யினுல், இந்தியாவிலுள்ள எந்நெறியையும் நீ சார்ந்த வனல்லன் எனக் கருதுகிறேன். என் பயணத்தில் நான்

கலந்தாராய வேண்டிய கற்றறிந்த குலங்களின் பட்டியலில் பறையர் குலத்தைக் காணவேயில்லை. இந்தியாவில் எப் பகுதியில் உன் கோவில் இருக்கிறது?

**பறையன் :** என் கோவில் எங்குமுளது. இயற்கைதான் என் கோவில். அக்கோவிலைப் படைத்தவனைப் பகலவன் தோன்றும் பொழுது வணங்குகிறேன்; பகலவன் மறையும் பொழுது அவனை வாழ்த்துகிறேன். துன்பத்தினால் கற்பிக்கப் பட்டு என்னிலும் மிக்க துன்ப நிலையிலிருப்பவனுக்கு என் உதவியை யான் எப்பொழுதும் மறுப்பதில்லை. என் மனைவி, என் குழந்தை, என் நாய், பூனை ஆகிய அனைவரும் இன்பமாக இருக்கவே நான் முயலுகிறேன். பகற்பொழுதின் முடிவில் வரும் இனிய தூக்கத்தைப்போல, யான் என் வாழ் நாளின் இறுதியில் வரும் சாக்காட்டை எதிர்பார்க்கின்றேன்.

**பண்டிதர் :** இக் கொள்கைகளை நீ எந்த நூலிலே கண்டாய்?

**பறையன் :** இவற்றை இயற்கையிற் கண்டேன். அது தவிர எனக்கு வேறொன்றும் தெரியாது.

**பண்டிதர் :** ஆ! ஆ!! அஃது ஒரு பெரிய நூலே. அதைப் படிக்க உனக்குக் கற்றுக் கொடுத்தவர் யார்?

**பறையன் :** துன்பமே எனக்கு அதைக் கற்பித்தது. என் நாட்டில் இழிவானதென்று மதிக்கப்படும் ஒரு குலத்தைச் சார்ந்தவனாய், இந்தியனாயிருக்க இயலாதவனாய், என்னை யான் மனிதனாக்கிக் கொண்டேன்; சமூகத்தினால் ஒதுக்கப் பட்டு இயற்கையில் புகலிடம் தேடிக் கொண்டேன்.

**பண்டிதர் :** உன் தனித்த நிலையில் நீ ஏதேனும் நூல் வைத்திருக்கிறாயா?

**பறையன் :** என்னிடம் ஒன்றுகூட இல்லை. யான் படிக்கவும் எழுதவும் அறியேன்.

**பண்டிதர் :** (நெற்றியைத் தடவிக் கொண்டே) நீ பல ஐயங்களினின்று விடுபட்டு விட்டாய். மக்களைத் தெளிவு படுத்தவும், அவர்கள் வாழ்வை இன்ப வாழ்வாக்கவும், எண்ணிறந்த நாடுகளிலுள்ள அறிஞர்களிடத்தில் உண்மையைத் தேடித் தெரிந்து கொள்ளும் பொருட்டு என் தாய் நாடாகிய இங்கிலாந்தினின்று நான் அனுப்பப்பட்டேன். ஆனால், பல வீண் முயற்சிகளுக்குப் பின்னும், பல கொடிய சச்சரவுகளுக்குப் பின்னும், 'உண்மையை ஆராய்வது பைத்தியக்காரத்தனம்,' என்னும் முடிவுக்கு வந்தேன். ஏனெனில், அதனை அறிந்து கொண்டால், பல பகைவர்களை உண்டாக்கிக் கொள்ளாமல், அதனை யாருக்குச் சொல்லுவதென்பது தெரியாது. உண்மையைச் சொல். நீயும் என்னைப் போலவே நினைக்கிறாயல்லவா?

**பறையன் :** நான் படியாதவனாயினும் என் கருத்தைச் சொல்லத் தாங்கள் இடந் தருவதால் கூறுகிறேன்: ஒவ்வொருவனும் தன் சொந்த இன்பத்திற்காகவே உண்மையை ஆராய வேண்டிய கடப்பாடுடையவன் என்று யான் நினைக்கிறேன். அங்ஙனமில்லையாயின், அவனை வளர்த்தவர்களின் கொள்கைகளுக்கும், அக்கறைகளுக்கும் ஏற்ப அவன் உலோபியாகவும், பேராசை கொண்டவனாகவும், குருட்டு நம்பிக்கையுடையவனாகவும், தீயவனாகவும், மனித ஊன் உண்பவனாகவுங்கூட மாறுவான்.

அந்தணத் தலைவரிடம் தெரிவித்த மூன்று கேள்விகளைப் பற்றியே எப்பொழுதும் நினைந்து கொண்டிருந்த ஆங்கில பண்டிதர், பறையன் தந்த மறுமொழியைக் கேட்டுப் பேரானந்தத்தில் மூழ்கினார்; "நீ ஒவ்வொரு மனிதனும் உண்மையை ஆராய வேண்டிய கடப்பாடுடையவனென்று கருதுவதால், அவ்வுண்மையைக் கண்டறிய எம்முறையைக் கைப்பற்ற வேண்டுமென்பதை எனக்குச் சொல்லவேண்டும். ஏனெனில், நம் புலன்கள் நம்மை மயக்குகின்றன. நம் அறிவும் நம்மை இன்னும் அதிகமாகத் தவறச் செய்கிறது. பெரும்பாலும் எல்லா மனிதர்களிடத்தும் அறிவு வேற்றுமை

அடைகிறது. ஆழ்ந்து பார்த்தால், அஃது ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட நலமென்றே எனக்குத் தோன்று கிறது. ஆதலாலேதான், அஃது இவ்வுலகத்தில் எங்கணும் இத்தனை வேறுபாட்டுடனிருக்கிறது. ஒரே விதமாக எண்ணு கின்ற இரண்டு சமயங்களோ, இரண்டு நாடுகளோ, இரண்டு சமூகங்களோ, இரண்டு குடும்பங்களோ, இன்னும் என்ன சொல்லுவேன், இரண்டு மனிதர்களோ இவ்வுலகத்திலில்லை. பகுத்தறிவு பயன்படாதுபோயின், எவ்வறிவு கொண்டுதான் உண்மையைத் தேடுவது?'' என்றார் பண்டிதர்.

**பறையன் :** இயல்பான உள்ளத்தைக் கொண்டுதான் உண்மையைத் தேட வேண்டும். புலன்களும் புத்தியும் தவறி விடக்கூடும். ஆனால், இயல்பான உள்ளம், தான் ஏமாற்றமடைய நேரினும், எப்பொழுதும் பிறருக்கு ஏமாற்றத்தைத் தருவதில்லை

**பண்டிதர் :** உன் விடை ஆழ்ந்த கருத்துடையது. ஒருவன் தன் உள்ளத்தைக் கொண்டுதான் முதலில் உண்மை யைத் தேட வேண்டுமேயன்றி புத்தியைக் கொண்டு தேடலாகாது. எல்லா மனிதர்களும் ஒரே விதமாகத்தான் புலனுணர்ச்சி பெறுகின்றார்கள். ஆனால், அவர்கள் வெவ்வேறு வகையாகப் பகுத்தறிகிறார்கள். ஏனெனில், உண்மையின் கோட்பாடுகள் இயற்கையில் அடங்கிக் கிடக் கின்றன. அவற்றின் விளைவுகள் மனிதர்களின் நலன்களிலே பொதிந்து கிடக்கின்றன. ஆகவே, இயல்பான உள்ளத்தைக் கொண்டுதான் உண்மையைத் தேட வேண்டும். ஏன் எனின், இயல்பான உள்ளம் தனக்குக் கேட்காததைக் கேட்பதைப் போலவும், தான் நம்பாததை நம்புவதைப் போலவும் பாவனை செய்யாது. அது, தான் ஏமாற்ற மடையவும் மற்றவரை ஏமாற்றமடையச் செய்யவும் துணை நில்லாது. இது கொண்டு நோக்க, ஓர் இயல்பான உள்ளம், சொந்த நலன்களால் மயக்குற்ற பெரும்பாலான மக்களின் உள்ளங்களைப் போல மெலிந்திராமல், உண்மையைத் தேடு வதற்கும், அதனைக் காத்து வைப்பதற்கும் வேண்டும் வன்மையைப் பெற்றதாயிருக்கிறது.

**பறையன் :** நீங்கள் என் கருத்தை என்னைக் காட்டிலும் மிக நன்ருக விரித்துரைத்தீர்கள். உண்மையானது வானத்தினின்றிழியும் பனித் துளியை ஒத்தது. தூய்மையாகப் பாதுகாத்து வைக்க அதனைத் தூய்மையான ஒரு கலத்திலே தான் ஏற்று வைக்க வேண்டும்.

**பண்டிதர் :** மிக நன்ருய் மொழிந்தாய்! வாய்மையுள்ள மனிதனே! ஆனுல், இதனினும் கடுமையானதை இன்னும் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. உண்மையை எங்குத் தேட வேண்டும்? இயல்பான உள்ளம் நம்மைப் பொறுத்த தாகும். ஆனுல், உண்மை மற்ற மனிதர்களைப் பொறுத்த தாயிருக்கிறது. நம்மைச் சூழ்ந்துள்ள மனிதர்களில் பெரும் பாலோர் தம் கொள்கைகளினுல் மயக்குண்டோ, அல்லது நலன்களினுல் சீர்கெட்டோ இருக்கும்பொழுது, உண்மையை எங்குக் காண்பது? யான் பல நாட்டு மக்களிடம் சென்றேன்; அவர்கள் நூல் நிலையங்களைத் துருவிப் பார்த்தேன்; அவர்களுடைய பண்டிதர்களோடு கலந்து பேசினேன். எங்கணும் மாறுபட்ட கொள்கைகளும், ஐயங்களும், அவர்கள் பேசும் மொழிகளைவிட ஆயிரம் மடங்கு மாறுபட்ட கருத்துக்களுமே யான் கண்டேன். மக்களின் அறிவுக்கெட்டிய பொருள்களின் மிக்க புகழ் வாய்ந்த நிலையங்களிலேயும் உண்மையைக் காண்பதற்கில்லையாயின், அவ்வுண்மையை எங்குப் போய்த் தேடுவது? குற்றமடைந்த புத்தியும் சீர்கெட்ட மனமுமுடைய மனிதர்களிடத்தில் இயல்பான உள்ளம் இருந்து பயன் என்ன?

**பறையன் :** மனிதர்களின் வாயிலாக மாத்திரம் உண்மை எனக்குப் புலனுகுமாயின், அவ்வுண்மை ஐயப்பாடுடையதாகும். உண்மையை மனிதர்களிடத்தில் தேடவே கூடாது; **இயற்கையிலே**தான் அதனைக் காண வேண்டும். உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களுக்கும் ஊற்ருயிருப்பது இயற்கைதான். அதன் பேச்சு, மனிதர்களின் பேச்சைப் போலவும் அவர்கள் சுவடிகளின் பேச்சைப் போலவும் தெளிவற்றதாயும் வேறுபாடுள்ளதாயும் இல்லை. மனிதர்கள் நூல்களை இயற்று

கிறார்கள். ஆனால், இயற்கையோ, பொருள்களைப் படைக் கிறது. உண்மையை ஒரு நூலின் மேல் நிறுவுவது அதனை ஒரு படத்தின்மீது அல்லது ஓர் உருவச் சிலையின்மீது நிறுவு வதற்கு ஒப்பாகும். அஃது ஒரு நாட்டுக்கு மாத்திரமே பயன் படக்கூடும். காலமும் அதனை நாளுக்கு நாள் மாறுபடச் செய்துவிடும். நூலெதுவும் மனிதனின் கலையாகும், ஆனால் இயற்கை இறைவனது கலையாயிருக்கிறது.

**பண்டிதர் :** நீ சொன்னது முற்றுஞ் சரியே. இயற்கை யான உண்மைகளுக்கு இருப்பிடம் இயற்கைதான். ஆனால், எடுத்துக்காட்டாக **வரலாற்று உண்மைகளின்** ஊற்று, நூல் களில் இல்லை என்றால், அவ்வூற்று வேறு எங்குத்தான் உளது? இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சியின் உண்மையை இன்று எவ்வாறு உறுதி செய்வது? அந்நிகழ்ச்சியை நமக்குக் கிடைக்கச் செய்த வர்கள் தெளிவற்ற கொள்கையின்றியும், ஓரமின்றியும் இருந் தார்களா? அவர்கள் உள்ளம் இயல்பானதாயிருந்ததா? அன்றியும், அதை நமக்கு முறை முறையாகத் தந்து வருகின்ற நூல்களுக்குங்கூட, ஏடெழுதுபவரும், அச்சுக் கோப்பவரும், உரை எழுதுபவரும், மொழிபெயர்ப்பவரும் வேண்டுமல்லவா? இவர்களெல்லாரும் உண்மையை ஓரளவு மாறுபடச் செய்யவில்லையா? நீ அழுத்தமாகச் சொல்லுவதற் கொப்ப, ஒரு நூல் ஒரு மனிதனது கலைதான். அங்ஙன மாயின், வரலாற்று உண்மை எதையும் புறக்கணித்துவிட வேண்டும்; ஏனெனில், அஃது தவறுகளுக்கு ஏதுவான மனிதர்களின் வாயிலாக நமக்குக் கிடைப்பதனால்.

**பறையன் :** கடந்தவற்றின் வரலாறு நம் இன்பத்திற்கு அவசியமன்று. இப்பொழுது உள்ளதன் வரலாறே, முன் இருந்ததின் வரலாறும் இனி இருக்கப் போவதின் வரலாறு மாகும்.

**பண்டிதர் :** நன்று! நன்று!! மன்பதையின் இன்பத்திற்கு **நல்லொழுக்க உண்மைகள்** அவசியம் வேண்டுமென்பதை நீ

ஒப்புக்கொள்வாய். அவற்றை இயற்கையில் எப்படிக் கண்டறிவது? விலங்குகள் அவ்வியற்கையில் ஒன்றோடொன்று போரிடுகின்றன; ஒன்று மற்றொன்றைக் கொல்லுகின்றது; கொன்று தின்று விடுகின்றது. இயற்கையின் பாகுபாடுகளே தங்கட்குள் மலைகின்றன. மனிதர்கள் தங்கட்குள் அங்ஙனம் நடந்து கொள்ளுவார்களா?

**பறையன் :** அப்படியன்று! ஒவ்வொரு மனிதனும், அவன் உள்ளம் இயல்பானதாயிருந்தால், தன் ஒழுக்கத்தின் விதியைத் தன் உள்ளத்திலேயே காண்பான். "பிறர் உனக்குச் செய்யக் கூடாதென்று நீ விரும்புவதை நீ பிறருக்குச் செய்யாதே!" என்னும் இச்சட்டத்தை இயற்கை அங்கே வைத்திருக்கிறது.

**பண்டிதர் :** மெய்தான்! இயற்கை மன்பதையின் நலன்களை நம் நலன்களின்மீதுதான் முறைப்படுத்தியிருக்கிறது. ஆனால், மக்களைப் பல கூறுபடுத்தி நிற்கும் கணக்கற்ற தொல் வழக்குகளுக்கும் நெறிகளுக்கும் இடையே **சமய உண்மைகள்** எங்ஙனம் கிடைக்கும்?

**பறையன் :** அவை இயற்கையிலேயே கிடைக்கும். இயல்பான உள்ளத்தோடு இயற்கையை ஆராய்ந்தால், அதனுள் இறைவனை, அவன் ஆற்றலில்—அவன் அறிவில்—அவன் அருளில் காணலாம். நாம் வன்மையற்றவர்களாயும், அறியாதவர்களாயும், எளியவர்களாயும் இருப்பதால், அவ்விறைவனை, அவனோடு போராட்டமின்றி நம் வாழ்நாளளவும் வழிபடவும் அவனுக்கு அன்பு செய்யவும் முற்படுவதற்கு முடியாமற் போய்விடுகிறது.

**பண்டிதர் :** நீ சொல்லுவது வியக்கத் தக்கதுதான். ஓர் உண்மையைக் கண்டு பிடித்தபோது அதனை மற்றவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமா என்பதை இப்போது எனக்குச் சொல்லுக. நீ அதனை வெளியிட்டால், எதிரான தவற்றிலே மூழ்கிக் கிடக்கும் எண்ணற்ற மக்களால்

துன்புறுத்தப்படுவாய். அவர்கள் அந்தத் தவறே உண்மையென்றும், அதனை அழிக்க ஏதுவாகும் எதுவும் தவருகுமென்றும் உறுதி கூறுவார்கள்.

**பறையன் :** இயல்பான உள்ளத்தையுடைய மக்களுக்குத்தான் உண்மையைச் சொல்ல வேண்டும். அதாவது, உண்மையைத் தேடும் நன் மக்களுக்கன்றி அதனை வெறுத்துத் தள்ளும் தீயோர்க்கன்று. உண்மை அழகிய முத்துப் போன்றது. தீயவன், அதனைக் காதுகளிலே அணிந்து கொள்ள முடியாத ஒரு முதலையைப் போல்வான். ஏனெனில், அவனுக்கு அது கிட்டுவதில்லை. நீங்கள் முத்து ஒன்றை ஒரு முதலையினிடத்தில் எறிவீர்களானல் அம்முதலை அம்முத்தைத் தான் அணிந்து கொள்வதற்கு மாருக, விழுங்கவே நினைக்கும்; அதனல், தன் பற்களை உடைத்துக் கொள்ளும். பிறகு ஆத்திரங் கொண்டு உங்கள் மீது பாய வரும்.

**பண்டிதர் :** இன்னும் ஒரே ஒரு தடைதான் எழுப்ப வேண்டியவனயிருக்கிறேன். நீ சொல்லுவதிலிருந்து மக்கட்கு உண்மை அவசியமாயுள்ளதெனினும், அவர்கள் தவற்றிற்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிருர்கள் என்பது பெறப்படுகிறது. அவர்களுக்கு உண்மையைச் சொல்லுகிறவர்களை அவர்கள் துன்புறுத்துவதால், எந்தப் பண்டிதன் அவர்களுக்கு அதைக் கற்பிக்க முன் வருவான்?

**பறையன் :** மனிதர்களுக்கு உண்மையைக் கற்பிப்பதற்காக அவர்களை எவன் துன்புறுத்துகிருனே, அவன் தான் முன் வருவான். அவன் ''துன்பம்'' எனப்படுவான்.

**பண்டிதர் :** ஓ! ஓ!! இயற்கை மனிதனே! இம்முறை நீ மோசம் போகிருய் என்று நினைக்கிறேன். துன்பம் மனிதர்களை மூட நம்பிக்கையில் ஆழ்த்துகிறது. உள்ளத்தையும் அறிவையும் அது சாய்த்து விடுகிறது. எவ்வளவுக்கு மக்கள் துன்பமடைகின்ருர்களோ, அவ்வளவுக்கு அவர்கள்

இழிவுள்ளவர்களாவும் எதையும் எளிதில் நம்புகிறவர் களாயும் எவருக்கும் அடங்கிக் கிடக்கிறவர்களாயும் இருக்கின்ருர்கள்.

**பறையன் :** அப்படியாயின், அவர்கள் போதிய துன்பம் உடையவர்களல்லர். துன்பமென்பது வெப்பம் பொருந்திய இலா கூர் நாட்டின் எல்லையிலிருக்கின்ற கரிய பெம்பர் மலையைப் போன்றது. அதன்மீது ஏற ஏற வறண்டுள்ள கற்பாறை களைத்தான் உங்கள் முன் காண்பீர்கள். ஆனல், உச்சியை அடைந்தீர்களாயின், உங்கள் தலைக்கு மேலே வானத்தையும் காலின் கீழே காசிமீர நாட்டையும் காண்பீர்கள்.

**பண்டிதர் :** இஃது அழகிய பொருத்தமான உவமைதான். ஒவ்வொருவரும் தத்தம் வாழ் நாளில் தத்தமக்குரிய மலைமீது ஏற வேண்டியவராய்த்தான் இருக்கின்றனர். தனித்திருக்கும் அறவனே! உன் மலை மிக்க கரடு முரடாயிருந்திருக்க வேண்டும். ஏனென்ருல், எனக்குத் தெரிந்த மனிதர் அனைவரினும் நீ உயர்ந்திருக்கிருய்; நீ மிகுந்த துன்பத்தில் இருந்தாய் போலும்! இந்தியாவில் உன் குலம் இவ்வளவு இழுக்குடையதாயும் அந்தணர்கள் குலம் இவ்வளவு மேன்மையுடையதாயும் இருப்பதற்குக் காரணம் என்ன? அதை எனக்கு முதலிலே கூறுக. நான் ஜெகந்நாதத்துக் கோவிலின் தலைமைக் குருவினிடமிருந்து வருகின்றேன். அவர் தம் தெய்வச் சிலையைக் காட்டிலும், சிந்திப்பதாயில்லை; ஆயினும், இறைவனைப் போன்று தம்மை வணங்குமாறு செய்து கொள்ளுகிருர்.

**பறையன் :** அதன் காரணம் யாதெனின், அந்தணர்கள் தொன்மையில் தாங்கள் பிரமதேவனின் தலையினின்று வெளிப்பட்டதாகவும், பறையர்கள் அவன் கால்களினின்று இறங்கினதாகவும் கூறுவதுதான். அவர்கள், ‘‘ஒரு நாள் பிரமதேவன் வழிப் பயணம் போய்க் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு பறையனிடத்தில் உணவு கேட்டான். அப்பறையன் மனித ஊனைத் தந்தான்,’’ என்று

கூறுகிறார்கள். இந்த வரலாறு தொடங்கி இந்தியா முழுதும் அவர்கள் குலம் மேன்மைப்படுத்தப்பட்டும் எங்கள் குலம் வெறுக்கப்பட்டும் வருகின்றன. நகரங்களின் அருகிற் செல்ல எங்களுக்கு உரிமையில்லை. எங்கள் மூச்சுப்படக் கூடிய தூரத்தில் நாங்கள் ஒரு நாயரையோ, இரசபுத்திரரையோ அணுகிவிட்டால், அவர் எங்களைக் கொன்றுவிடலாம்.

**பண்டிதர் :** அட ஆண்டவனே! பெரும் பைத்தியக்காரத் தனமும் பேரநீதியுமன்றோ இது! இத்தகைய மூடத்தனத்தை இந்தியர்கள் நம்பும்படிச் செய்ய அந்தணர்களால் முடிந்ததா?

**பறையன் :** ஆம். அவர்களுக்குக் குழந்தைப் பருவத்திலேயே அவ்விதம் கற்பித்ததாலும், அதை ஓயாமல் திருப்பித் திருப்பிச் சொல்லி வந்ததாலும் முடிந்தது. மக்கள் கிளிப் பிள்ளைகளைப் போலப் பிறர் கற்பிப்பதைக் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

**பண்டிதர் :** துன்பமுடையவனே! அந்தணர்கள், நீ பிறக்கும்பொழுதே இழிவு என்னும் ஆழ்ந்த பள்ளத்திலே உன்னைத் தள்ளிவிட, நீ அதினின்றும் வெளியேற என்ன செய்தாய்? ஒரு மனிதனை அவன் கண் முன்பாகவே இழிவு படுத்துவதைக் காட்டிலும் துயரமானது மற்றொன்று எனக்குத் தெரியவில்லை. அங்ஙனஞ் செய்வது அவன் ஆறுதல்களில் முதன்மையானதையே போக்கிவிடுவதாகும். ஏனெனில், எல்லா ஆறுதல்களிலும் மிக உறுதியானது தனக்குள்ளே தான் அடங்குவதில் காண்பதாகும்.

**பறையன் :** பிரமன் வரலாறு உண்மைதானா? தங்களுக்கு ஒரு தெய்விக மூலத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டுமென்று அக்கறை கொள்ளும் அந்தணர்களே அவ் வரலாற்றைக் கூறுகின்றார்கள். தங்கள் தெய்வ நிலைமையினின்று தெரிவிப்பதை நம்ப மறுக்கும் பறையர்களைப் பழி தீர்த்தற்பொருட்டு ஒரு பறையன் பிரமதேவனை மனித ஊன் உண்பவனாக ஆக்க முயன்றானென்று அவர்கள் கற்பனை

செய்தார்கள் போலும் என முதலில் எண்ணினேன்; பிறகு, அந்நிகழ்ச்சி உண்மையென்றே வைத்துக் கொள்வோம். ஆண்டவன் நேர்மையானவன். ஒருவன் செய்த பிழைக்காக அவன் இனம் முழுவதையும் — அஃது அப்பிழையில் ஈடு படாதபோது — குற்றம் உள்ளதாகச் செய்யமாட்டான். பறையர் குலம் முற்றும் அப்பிழையில் ஈடுபட்டது என்று கொண்டாலும், அக்குலத்தில் பின் வந்தார் அப்பிழைக்கு உடந்தையாய் இருந்ததில்லை. முன்னோர் செய்த குற்றத் திற்காக, அவர்களை எப்பொழுதும் பார்த்தறியாத அவர்கள் வழி வந்த பிள்ளைகளை ஆண்டவன் தண்டிக்க மாட்டான். அதுபோலவே இன்னும் பிறவாத பிள்ளைகளின் குற்றத் திற்காக அவர்களின் முன்னோர்களை அவன் தண்டிப்பதில்லை. தன் கடவுளுக்கு வஞ்சனை செய்த ஒரு பறையனுக்கு ஏற்பட்ட தண்டனையில் இன்று எனக்குப் பங்குண்டென்று கொண்டாலுங்கூட அவன் செய்த பிழையில் யான் ஈடுபடா மலே இதுவரையில் பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்டன. ஆண்டவன் வெறுத்த ஒன்று அப்பொழுதே அழிந்துபடாமல் நிலைத்து நிற்கக்கூடுமா? நான் இறைவனால் வெறுக்கப் பட்டேனாயின், என்னால் நாட்டப்பெறுவதெல்லாம் நனி விளங்காது. கடைசியாக, எனக்கு நன்மை செய்யும் கடவுளால் நான் வெறுக்கப்படுகிறேன் என்று வைத்துக் கொள்வோம். அவர் செய்வதைப் போல நான் வெறுக்க வேண்டியவர்களுக்கு நன்மை செய்து அக்கடவுளுக்கு இனிமையாக இருக்க முற்படுவேன்.

**பண்டிதர் :** எல்லாராலும் ஒதுக்கப்பட்ட நிலையில் நீ உயிர் வாழ்வதற்கு என்ன செய்தாய்?

**பறையன் :** முதன் முதல் இவ்வாறு எண்ணினேன் : ''எல்லாரும் உனக்குப் பகைவராயின் நீ உனக்கே நண்பனா யிரு. உன் துன்பம் மனித ஆற்றலுக்கு மேம்பட்டதன்று. மழை எவ்வளவு கனத்துப் பெய்யினும், ஒரு சிறிய பறவையின் மேல் ஒரு தடவையில் ஒரு துளிதான் விழும்.'' உணவு தேடக் காடுகளினுள்ளே நுழைந்து சென்றேன்.

ஆறுகளின் நெடுக நடந்தேன். பெரும்பாலும் சில காட்டுக் கனிகளே எனக்குக் கிடைத்தன. காட்டு விலங்குகளுக்கும் அஞ்ச வேண்டியிருந்தது. இவ்வாருகத் தனித்த மனிதனுக்கு இயற்கை ஏறக்குறைய ஒன்றுமே செய்யவில்லை என்றும், அவ்வியற்கை என் வாழ்க்கையை, எந்தச் சமூகம் தன்னிடமிருந்து என்னை ஒதுக்கித் தள்ளிவிட்டதோ, அந்தச் சமூகத்தோடேயே பிணைத்துவிட்டதென்பதையும் அறிந்து கொண்டேன். அப்பொழுது எவரும் கவனியாத வயற்புறங்களுக்குச் சென்று கொண்டிருந்தேன். அவ்வயற்புறங்கள் இந்தியாவில் ஏராளமாய் இருக்கின்றன. பயிர் செய்பவரின் அழிவுக்குத் தப்பி நிலைத்திருந்த உணவுக்கேதுவான சில செடிகளை எப்பொழுதும் காண்பேன். இங்ஙனமாக எங்கும் வேளாண்மை விடுத்த மிச்சத்தால் உயிர் வாழலாம் என்ற நம்பிக்கையோடு ஒரு நாட்டினின்று மற்ருெரு நாட்டிற்குப் போய்க் கொண்டிருந்தேன். பயனுள்ள சில செடிகளின் விதைகள் கிடைக்குமாயின், அவற்றை 'நமக்கில்லாது போயினும், பிறர்க்கேனும் ஆகட்டும்,' என்று சொல்லிக் கொண்டு, திரும்ப விதைப்பேன். ஒரு சிறிது நன்மை செய்ய என்ஞல் முடிந்ததென்று காணும்பொழுது என் துன்பம் ஒரு சிறிது குறைந்ததாகத் தோன்றும்.

நான் ஒன்றின்மீது பேராவல் கொண்டிருந்தேன். அது, சில நகரங்களில் நுழைந்து பார்க்க வேண்டுமென்பதுதான். தொலைவிலிருந்து அந்நகரங்களின் மதில்களையும் கோபுரங்களையும், அவற்றின் ஆறுகளிலுள்ள வியக்கத் தக்க ஓடங்களின் கூட்டத்தையும், அவற்றின் பாதைகளிலே எல்லாத் திக்குகளினின்று வந்து சேருகின்ற பண்டங்களைச் சுமந்து செல்லும் வணிகர் கூட்டங்களையும், நகரங்களில் காவல் ஏற்க நாட்டின் உள்ளிடத்திலிருந்து வரும் போர் வீரர்களின் கூட்டங்களையும், வேற்று நாடுகளிலிருந்து இன்ப நிகழ்ச்சிகளை அறிவிக்கவோ அல்லது நட்புரிமை கொண்டாடவோ வருகின்ற பெரும்பாலார் புடை சூழ்ந்த தூதர்களின் பவனிகளையும் கண்டு மகிழ்வேன். அந்நகரங்களின் சாலைகளுக்கு எவ்வளவு அருகில் யான் செல்ல உரிமையுண்டோ,

அவ்வளவும் செல்லுவேன். எண்ணற்ற பிரயாணிகள் எழுப்புகின்ற நீண்ட துகட்பிழம்புகளை வியப்புடன் கண்டு மகிழ்வேன். கடற்கரையிலே எழுந்து மறையும் அலைகளின் இரைச்சலுக்கொப்ப, அடுத்துள்ள நாட்டுப் புறங்களிலே கேட்கப்படும் பெரிய நகரங்களினின்றெழும் குழம்பிய ஒலி எனக்குப் பெரு வேட்கையை உண்டாக்கும். தங்கள் தொழிலையும் தங்கள் சொத்துக்களையும் தங்கள் மகிழ்ச்சியையும் பொதுவாக வைக்கும் இத்தனை பல்வேறுன நாடுகளின் மக்கள் கூட்டம் ஒரு நகரத்தை இன்பக் களஞ்சியமாகச் செய்திருக்க வேண்டுமென்று எண்ணினேன். பகற்பொழுதில் நகரத்திற்கருகில் வருவதற்கு எனக்கு உரிமை இல்லையெனின், இரவில் அதனுள் நுழைய என்னை மறுப்பவர் யார்? 'பல பகைவர்களையுடைய ஓர் எளிய சுண்டெலி இருளின் துணை கொண்டு, தான் நினைக்குமிடமெல்லாம் போய்க் கொண்டும் வந்துகொண்டுமிருக்கிறது. அஃது ஏழையின் குடிசையிலிருந்து அரசர்களின் அரண்மனைக்குச் செல்லுகிறது. வாழ்க்கையின்பத்தை நுகர அதற்கு விண்மீன்களின் ஒளியே போதும். அப்படியிருக்க, எனக்கு ஞாயிற்றின் ஒளி ஏன் வேண்டும்?' என்று சிந்தித்தேன். இந்தச் சிந்தனைகளைத் தில்லிக்கு அருகிலேதான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இவை, இருளுடன் யான் நகரினுள் நுழையும் அளவுக்கு என்னைத் தூண்டிவிட்டன. இலாகூர் வாயில் வழியே தில்லியுள் நுழைந்தேன். முதலில் ஒரு தனித்த நீண்ட தெரு வழியே போனேன். அத்தெருவின் இரு மருங்கிலும் வளைவுகளால் தாங்கப்பட்ட மேல் மாடங்களையுடைய வீடுகள் இருந்தன. அவ்வளைவுகளில் வணிகர்களின் கடைகளிருந்தன. சிறிது தூரத்தில் நன்ருக மூடப்பட்ட பெரிய சாவடிகளையும், பெரிய கடைகளையும் கண்டேன். அங்குப் பேரமைதி நிலவிக் கொண்டிருந்தது. நகரத்தின் உள்ளிடத்தை அணுகிய பொழுது, **உமராக்களின்** அழகிய தெருவைக் கடக்கலானேன். அத்தெரு நிறைய, யமுனை யாற்றின் நெடுக, மாளிகைகளும் தோட்டங்களும் அமைந்திருந்தன. ஆற்றங் கரையில் பந்தங்களின் ஒளியில் நடனம் புரிந்து கொண்டிருந்த நாடகக் கணிகை

யரின் பாட்டொலியும் இசைக் கருவிகளின் ஓசையும் எங்கணும் ஒலித்துக் கொண்டிருந்தன. இவ்வினிய காட்சியைக் கண்டு நுகர்தற் பொருட்டு ஒரு தோட்டத்தின் வாயிலிற் சென்றேன். ஆனால், ஏழைகளைத் தடி கொண்டடித்துத் துரத்தும் அடிமைகளால் நான் வெளியே தள்ளப்பட்டேன். இப்பெரு மக்களின் தெருவினின்று அகன்ற போது என் சமயத்தைச் சார்ந்த பல கோவில்களின் அருகிலே சென்றேன். அங்கு ஏராளமான வறியவர்கள் கீழே குப்புறக் கிடந்து கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார்கள். மூட நம்பிக்கைக்கும் அச்சத்துக்கும் ஆதாரமான அந்தக் கட்டடங்களைக் கண்டு விலகி விரைந்து சென்றேன். அதற்கப்பால் இரவின் நேரங்களை வானுச்சியிலிருந்து அறிவிக்கும் **முல்லாக்களின்** கூர்ந்த குரல்கள் கேட்டன. அப்பொழுது நான் ஒரு பள்ளி வாசலின் கோபுரத்தின் கீழிருப்பதாகத் தெரிந்துகொண்டேன். சற்றுத் தொலைவில் கொடிகளையும் காவற்காரர்களையும் உடைய ஐரோப்பியர்களின் தொழிற்சாலைகள் இருந்தன. அக்காவற்காரர்கள் ஓயாமல், “**கபர்தார்!**” அதாவது ‘**எச்சரிக்கை!**’ எனக் கூவிக் கொண்டிருந்தார்கள். பிறகு ஒரு பெரிய கட்டடத்தின் ஓரமாகச் சென்றேன். அதினின்று வெளிவரும் விலங்குகளின் ஓசையாலும் புலம்பொலிகளினாலும் அஃது ஒரு சிறைச் சாலை என்பதை உணர்ந்தேன். சிறிது நேரத்திற்குப் பின் ஒரு பெரிய மருத்துவச் சாலையில் துயரக் கூச்சல்களைக் கேட்டேன். அம்மருத்துவச் சாலையினின்று வண்டிகளில் நிறையப் பிணங்களை ஏற்றிச் சென்றார்கள். மேலும் நடந்து சென்றேன். தெருக்களிலே திருடர்கள் தப்பி ஓடுவதையும் அவர்களைப் பின் தொடர்ந்து நகரக் காவலாளர்கள் விரைந்து செல்வதையும், மாளிகைகளின் வாயில்களிலே விருந்திற் சிந்திய எச்சில் உணவுக்குப் பிரம்படியையும் பாராட்டாமல் கையேந்தி நிற்கும் பிச்சைக்காரக் கூட்டங்களையும் கண்டேன். அன்றியும், உயிர் வாழ்தற்பொருட்டு வெளிப்படையாகப் பரத்தைமை பூண்ட பெண்களை எங்கணும் பார்த்தேன். கடைசியாக, நீண்ட நேரம் நடந்த பின், அதே தெருவில் பெரிய முகலாய மன்னன் உறைகின்ற

கோட்டையைச் சுற்றியிருக்கும் ஒரு பெரிய வெளியிடத்தை அடைந்தேன். அவ்வெளியிடத்தில் அம்மன்னனின் மெய் காப்பாளர்களாகிய சிற்றரசர்கள் அல்லது நவாபுகளின் கூடாரங்களும், அவர்களைச் சார்ந்த குதிரைப் படைகளின் கூடாரங்களும் அமைக்கப்பட்டிருந்தன. அக்கூடாரங்கள் பந்தங்களினுலும், கொடிகளாலும், திபேத்து நாட்டுப் பசுக் களின் வால்களை நுனியில் கொண்ட நீண்ட கழிகளினுலும் ஒன்றினின்றென்று பிரித்தறியத் தக்கனவாயிருந்தன. நீர் நிறைந்த ஓர் ஆழ்ந்த பள்ளம், மேலே பீரங்கிப் படையை உடையதாய் அவ்வெளியிடத்தைப் போலக் கோட்டையைச் சுற்றிலும் அமைந்திருந்தது. காவற்காரர்களிடமிருந்த வெளிச்சத்தைக் கொண்டு வானளாவி நின்ற அரண்மனைக் கோபுரங்களையும் கீழ் வானத்திற் போய் மறையும் அதன் மதிற் சுவர்களின் நீளத்தையும் நோக்கினேன். உள்ளே செல்லப் பேராவல் கொண்டேன். ஆனல், கம்பங்களிலே தொங்கவிடப்பட்டிருந்த பெரிய **"கோராக்கள்"** அல்லது **'அடிக்குஞ் சவுக்குகள்'**, வெளியிடத்தில் கால் வைக்க எழுந்த என் வேட்கையைப் போக்கி விட்டன. ஆகவே, நான் ஒரு கோடியிலே நின்றுவிட்டேன். அங்கு நீகிரோ அடிமைகள் சிலர் இருந்தனர். அவர்கள், சூழ்ந்து உட்கார்ந்து கொண் டிருந்த நெருப்பண்டை நான் ஓய்வு கொள்ள இசைந் தார்கள். அங்கிருந்து மன்னர் மன்னனது மாளிகையைக் கண்டு மகிழ்ந்தேன். "இங்குத்தான் மனிதர்களுள் சிறந்த இன்ப வாழ்வு உடையவன் வாழ்கிருன். அவனுக்குக் கீழ்ப்படியவே இத்தனை சமயங்களும் கற்பிக்கின்றன. அவனுடைய புகழுக்கே இத்தனை தூதர்கள் வருகின்றுர்கள். அவனுடைய செல்வத்துக்கே இத்தனை நாடுகள் வளம் குன்றிப் போகின்றன. அவனுடைய இன்ப நுகர்ச்சிக்கே இத்தனை வணிகக் கூட்டங்கள் வருகின்றன. அவன் காப்புக்கே படைக்கலம் ஏந்திய இத்தனை மனிதர்கள் அமைதியாகக் காவல் புரிகின்றுர்கள்," என்று எண்ணினேன்.

இவ்வாறு நான் எண்ணிக் கொண்டிருக்கும் பொழுது வெளியிடம் முற்றும் பெரிய மகிழ்ச்சி ஆரவாரம் கேட்டது.

கச்சைகளினுல் அணி செய்யப்பட்ட எட்டு ஒட்டகங்கள் போவதைப் பார்த்தேன். அவை கலகக்காரர் எண்மரின் தலைகளைச் சுமந்து கொண்டு போவதாக அறிந்தேன். அத் தலைகளை முகலாய மன்னரின் படைத் தலைவர்கள், தக்காண மாவட்டத்தினின்று அவருக்கு அனுப்பியதாகவும், அம்மாவட் டத்தின் ஆட்சியாளராக அவரால் நியமிக்கப்பெற்ற அவர் மைந்தருள் ஒருவர் மூன்ருண்டுகளாக அவரோடு போர் புரிந்து வருவதாகவும் அறிந்து கொண்டேன். சிறிது நேரத் திற்குப் பின் ஒட்டகத்தின்மீது மிக விரைவாக ஓர் அஞ்சற் காரன் வந்தான். அவன், இந்தியாவின் எல்லையிலுள்ள நகரமொன்றை, அதன் படைத் தலைவர்களுள் ஒருவன் வஞ்சனையாகப் பாரசீக மன்னனுக்கு விட்டுவிட்ட காரணத்தால் இழக்க நேர்ந்ததெனக் கூற வந்தான். அவ்வஞ்சறகாரன் வந்ததும் வங்காளத்தின் ஆட்சியாளரால் அனுப்பப்பட்ட மற்ருெருவன் வந்தான். வர்த்தக நலத்தின் பொருட்டுக் கங்கையாற்றின் கழிமுகத்தில் முகலாயப் பேரரசன் ஐரோப் பியர்களுக்குக் கொடுத்திருந்த ஓர் இடத்தில் அவர்கள் கோட்டை ஒன்று கட்டிவிட்டதாகவும், ஆற்றில் நாவா யோட்டும் உரிமையை அவர்கள் கவர்ந்து கொண்டதாகவும் செய்தி கொண்டு வந்தான். இவ்விரு அஞ்சற்காரர்கள் வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அரண்மனையிலிருந்து ஒரு காவற்றலைவன் ஒரு காவற் கூட்டத்தாரோடு வெளியிற் செல்வதைக் காண நேர்ந்தது. முகலாய மன்னன் அக் காவற்றலைவனுக்கு உமாராக்கள் தெருவுக்குப் போய் அங்கு அரசாங்கத்தின் பகைவர்களோடு தொடர்பு கொண்டி ருந்ததாகக் குற்றஞ்சாட்டப் பெற்ற முதன்மையான மூவரை விலங்கிட்டு அழைத்து வரும்படிக் கட்டளையிட்டிருந்தான். பாரசீக மன்னனது பெருமையைப் பற்றியும் முகம்மதுநபி யின் சட்டத்திற்கு மாருக இந்திய நாட்டுப் பேரரசர் மது வருந்திச் சமய நம்பிக்கைக்குக் கேடு சூழ்ந்தாரென்றும், ஒரு முல்லா தன் சமயச் சொற்பொழிவிலே வெளிப்படையாகக் கூறினமையால் அம்முல்லாவை முகலாய மன்னன் அதற்கு முன் நாள் சிறைப்படுத்தினுன். அன்றியும், அவன் தன்னை எதிர்த்த தன் புதல்வனுக்குத் துணை நின்றதாக உறுதி

கொண்டு தன் மனைவிகளுள் ஒருத்தியையும் தன் மெய் காப்பாளர்களின் தலைவர்களுள் இருவரையும் கழுத்தை நெறித்து யமுனையாற்றில் எறிந்துவிடச் செய்ததாகவும் திண்ணமாகச் சொல்லப்பட்டது. இத்துக்க நிகழ்ச்சிகளை நான் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது, தீடீரென்று அந்தப்புர அட்டிற் கூடத்திலிருந்து நீண்ட நெருப்புப் பிழம்பொன்று மேலே எழும்பிற்று. அதன் புகைச் சுழல் மேகங்களை எட்டியது. அதன் செந்நிற ஒளி கோட்டையின் கோபுரங்களையும் அகழிகளையும் வெளியிடத்தையும் பள்ளி வாசல்களின் கோபுரங்களையும் ஒளிரச் செய்து, கீழ் வானம் வரையில் விரிந்து நின்றது. உடனே பேரொலி கொண்டு காவற் கூட்டத்தின் பெரிய செப்பு முழவுகளும் "கர்ஞ" என்னும் பெரிய நாதசுரங்களும் இடர் அறிவிப்பு குறித்து முழங்கின. குதிரை வீரர் நகரெங்கும் பரவினர்; அரண் மனையை அடுத்துள்ள வீடுகளின் கதவுகளை உடைத்து உட் புகுந்தனர்; நெருப்பு அணைப்பதற்கு வரும்படி அவ்வீடுகளி லிருந்த மக்களைச் சவுக்கு கொண்டு வன்மையாகத் தாக்கினர். பெரிய மனிதர்களின் அருகிலிருப்பது சிறியவர் களுக்கு எவ்வளவு இடராக இருக்கிறதென்பதை நானும் உணர்ந்தேன். நறுமணப் பொருள்களைத் தன்னகத்தே எறிபவர்களைக்கூட — அவர்கள் மிக அருகில் வருவார் களானால் — சுட்டுவிடும் நெருப்பைப் போன்றவர்கள் பெரிய மனிதர்கள். நான் தப்பியோட நினைத்தேன். ஆனால், வெளியிடத்தின் எல்லாச் சாலைகளும் மூடப்பட்டிருந்தன. தெய்வச் செயலாய் நான் ஓடிய பக்கம் அந்தப்புரமாயில்லா திருப்பின் நான் வெளியேறுவது இயலாததாய்விடும். அந்தப்புரத்திலிருந்து பாகர்கள் பெண்களை யானைகளின்மீது ஏற்றிக்கொண்டு வெளியேறினர்கள். அதனல், நான் தப்பி யோடல் எளிதாயிற்று. காவற்காரர்கள், அரண்மனைக்கு உதவியாக வரும்படி எங்கும் மக்களைச் சவுக்கினல் அடிக்கவே யானைகள் அவர்களைத் துதிக்கையினல் அடித்துத் தொலைவிற் செல்லச் செய்தன. எனவே, ஒரு வேளை முன்ன வர்களால் துரத்தப்பட்டும் மற்ருரு வேளை பிந்தியவற்ருல் துரத்தப்பட்டும் இந்த அஞ்சத் தக்க அலங்கோலத்தினின்று

வெளி வந்தேன். தீயின் ஒளியினுல் நகரின் மற்ருெரு கோடியை அடைந்தேன். அங்குக் குடிசைகளில், பெரிய மனிதர்களுக்குத் தொலைவாக, மக்கள் தங்கள் வேலை களினின்று அமைதியாக ஓய்வு கொண்டிருந்தார்கள். அங்குத்தான் என் உயிர் தன்னிலைக்கு வரத் தொடங்கிற்று. அப்பொழுது நான் இவ்வாறு எண்ணினேன்: "ஒரு நகரத்தைக் கண்டேன். நாடுகளின் தலைவர்களின் இல்லங் களைப் பார்த்தேன். அத்தலைவர்களே எத்தனை தலைவர் களுக்கு அடிமையாய் இருக்கின்ருர்கள்! அவர்கள் ஓய்வு நேரத்திற்கூட இன்ப நுகர்ச்சிக்கும் பேராசைக்கும் மூட நம்பிக்கைக்கும் உலோபத்தனத்துக்கும் கீழ்ப்படிகிருர்கள். அவர்கள் தூங்கும்போதுகூட அவர்களைச் சூழ்ந்திருக்கும் எண்ணிறந்த எளிய, தீய உயிர்களாகிய திருடர்கள், பிச்சைக்காரர்கள், பரத்தையர்கள், தீயிடுபவர்கள், ஏன்! அவர்களுடைய போர் வீரர்கள், அவர்களுக்கு மேம்பட்ட வர்கள் அவர்களின் குருமார்களுக்குங்கூட அஞ்ச வேண்டி இருக்கிறது. இரவில் இவ்வாறு ஒரு நகரம் கலக்கமுற்று இருக்கிறதென்ருல், பகற்பொழுதில் அஃது இருக்கும் நிலைமைதான் என்னே? மனிதனின் தீமைகள் அவன் நுகர்ச்சிகளோடு வளர்கின்றன. எல்லா நுகர்ச்சிகளையும் ஒருங்கடைந்துள்ள பேரரசன் இரக்கத்துக்கு உரியவனன்ருே! அவன், உள்நாட்டுக் குழப்பங்களையும் வெளி நாட்டுச் சண்டைகளையும், தனக்குத் தேறுதலையும் காப்பையும் அளிக்க வல்ல பொருள்களையும், தன் படைத் தலைவர்களையும் தன் காவற்காரர்களையும், தன் முல்லாக்களையும், தன் மனைவி களையும் மக்களையுங்கூட, கண்டு அஞ்ச வேண்டியவனு யிருக்கிருன். அவன் கோட்டையின் அகழிகள் மூட நம்பிக் கையின் சாயலையும் தடுத்து நிறுத்தா. அவன் யானைகள் எவ்வளவு பழக்கப்பட்டிருப்பினும், பெருங் கவலைகளை அவனிடமிருந்து விலக்கித் தள்ளா. நான் இவற்றிற் கெல்லாம் அஞ்சுகின்றேனில்லை. கொடியவன் எவனும் என் உடலின் மீதோ என் உயிரின் மீதோ ஆணை செலுத்துகிரு னல்லன். என்னையே யான் அலைக்கழித்துக் கொள்ளே னுயின், என் மனச்சான்றின்படி நான் இறைவனுக்குப் பணி

செய்யலாம். எம்மனிதனுக்கும் நான் அஞ்ச வேண்டிய தில்லை. உண்மையில் ஒரு பறையன் ஒரு பேரரசனைக் காட்டிலும் குறைவான துன்பத்தையுடையவனாகின்றான்.''

இவ்வாறு நான் எண்ணிய பொழுது என் கண்களில் நீர் தளும்பிற்று. என் துன்பங்களை நான் பொறுத்துக் கொள்ளக் கற்பிப்பதற்காக, அவற்றைக் காட்டிலும் தாங்கவொண்ணாப் பெருந் துன்பங்களை எனக்குக் காட்டிய இறைவனுக்கு மண்டியிட்டு நன்றி பாராட்டினேன்.

அந்நாள் முதல் நான் **தில்லி**யின் எல்லைப் புறங்களுக்குத் தான் சென்று வரலானேன். அங்கிருந்து மக்கள் உறை விடங்களை விண் மீன்கள் ஒளி செய்து விளக்குவதையும், அவர்களுடைய வெளிச்சங்களோடு அவை ஒன்றுபடு வதையும் கண்டு வந்தேன். அக்காட்சி வானமும் நகரமும் ஒரே காணியாட்சிக்கு உட்பட்டன போலத் தோன்றிற்று. இந்நிலப் பரப்பைத் திங்கள் எழுந்து விளக்கும் பொழுது இங்குப் பகலிலிருந்த நிறங்களன்றி வேறு வண்ணங்களைக் காண்பேன். தொலைவில் யமுனை யாற்றின் நீரிலே தங்கள் எதிர்ச் சாயலைத் தோற்றுவிக்கின்ற, வெள்ளி போன்றும் மெல்லிய பட்டாடையால் மூடப்பட்டன போன்றும் இருக் கின்ற கோபுரங்களையும் வீடுகளையும் மரங்களையும் கண்டு மகிழ்வேன். தனித்தும் அமைதியாகவுமுள்ள பெரிய தெருக் களினூடே தடையின்றிச் செல்வேன். அப்பொழுது நகரம் முழுதும் எனக்கு உரிமையுடையது போலத் தோன்றும். அப்படியிருந்தும், ஒரு பிடிச் சோறு எனக்குக் கொடுக்க மனித சமூகம் மறுத்து விடும். 'சமயம்' என்பது என்னை அவ்வளவு அருவருப்புக்குரியவனாக்கி விட்டது! உயிருள்ள வர்களிடையே எனக்கு நண்பர்கள் கிடையாமையால், இறந்து பட்டவர்களிடையே எனக்கு நண்பர்களைத் தேடினேன். சுடுகாட்டுக்குச் சென்று அங்கே சவக் குழி களின்மீது உறவினர்களின் வாஞ்சையால் தரப்படும் உணவை உண்டு வந்தேன். அந்த இடத்திலேதான் நான், ''இதுதான் அமைதியின் நகரமாகும். இங்கு வல்லமையும்

இறுமாப்பும் மறைந்தொழிகின்றன. மனத் தூய்மையும் அறத் தன்மையும் பாதுகாப்பிலிருக்கின்றன. இங்கு வாழ்க்கையின் நடுக்கங்களெல்லாம் இறந்துபடுகின்றன. இறப்பதற்கு அஞ்சுவதுகூட மாய்ந்தொழிகிறது. இதுதான் வண்டிக்காரன் தன் வண்டியை எப்பொழுதும் அவிழ்த்து விடும் சாவடியாகும். இதுதான் பறையன் இளைப்பாறும் சத்திரமாகும்,'' என எண்ணினேன். இவ்வெண்ணங்களால் சாவு விரும்பத் தக்கதெனத் தோன்றிற்று. உலகத்தை வெறுக்க நேர்ந்தது. நாழிகைக்கு நாழிகை எண்ணிறந்த உடுக் கூட்டங்கள் உதிக்கும் கீழ்த் திசையை நோக்கினேன். அவ்வுடுக் கூட்டங்களின் ஊழ் எனக்குத் தெரியாது போயினும், அது மனிதர்களின் ஊழோடு இணைக்கப்பட்டிருப்பதாகவும், மனிதர்கள் காணுத பல பொருள்களை அவர்கள் தேவைக்காகத் தோற்றுவித்திருக்கும் இயற்கையானது அவர்கள் கண்களால் காணும் பொருள்களையேனும் அவ்வூழோடு பிணைத்திருப்பதாகவும் உணர்ந்தேன். கோள்களுடன் என் உயிர் வானத்தில் உயர்ந்து சென்றது. அக்கோள்களின் இனியதும் நிலையானதுமான ஒளியிலே வைகறைப் பொழுதின் இளஞ் செந்நிறம் கலக்கும் பொழுது நான் விண்ணுலகத்தின் வாயிலிலே இருப்பதாக எண்ணினேன். ஆனால், அவ்வைகறையின் வெப்பவொளி கோயில்களின் உச்சியைப் பொன் போல விளங்கச் செய்தபோது நான் ஒரு நிழல் மறைவது போல மறைந்து விட்டேன். மனிதர்களை விட்டு வெகு தொலைவில் சென்று, கொல்லைப் புறங்களிலே ஒரு மரத்தடியில் இளைப்பாறினேன். அங்குப் பறவைகளின் இன்னிசையைக் கேட்டுக் கொண்டே கண்ணுறங்கி விட்டேன்.

**பண்டிதர்:** துன்பமும் உணர்ச்சியும் நிறைந்த மனிதனே! உன் வரலாறு மிக உருக்கமுள்ளதாய் இருக்கிறது. நகரங்களில் பல, இரவில்தான் பார்க்கத் தக்கனவாயிருக்கின்றன என்பதை நீ நம்பு. என்னவாயினும், இயற்கை இரவில் அழகுடையதாயிருக்கிறது. அவ்வழகு இன்பந் தருவதில் குறைவுள்ளதன்று. என் தேசத்துப் புகழ் வாய்ந்த புலவர்

ஒருவர் அவ்வழகு ஒன்றையே கொண்டாடினரேயன்றி, மற்றவற்றைப் புகழவில்லை. நீ கடைசியாகப் பகற்பொழுதில் இன்பம் துய்த்தற்காக என்ன செய்தாய் என்பதை எனக்குக் கூறுக.

**பறையன் :** இரவில் இன்பமாயிருப்பதே ஒரு பெருங் காரியம். பகற்பொழுதில் கீழ் மகனொருவனுக்குத் தன் முகத்தின் அழகை மாத்திரம் காட்டி, இராப்பொழுதில் தன் காதலனுக்கு அந்தரங்க அழகுகளை வெளிப்படுத்துகின்ற ஓர் அழகிய பெண்ணுக்கொப்பாக இருக்கிறது இயற்கை. தனித்த நிலைமை, இன்ப நுகர்ச்சியையுடையதெனினும், அதற்குரிய சில குறைகளும் உண்டு. துன்பமுற்ற ஒருவனுக்கு அத்தனித்த நிலை ஓர் அமைதியான துறைமுகத்தைப் போன்றிருக்கிறது. தான் கலக்கமுறுமல், மற்ற மனிதர்களின் வேட்கைகளெல்லாம் சென்று கொண்டிருப்பதை அத்துறைமுகத்திலிருந்து அவன் காண்கின்றான். தன் அசைவற்ற தன்மையை அவன் நினைந்து மகிழ்ந்திருக்கும் பொழுது, காலம் அவனை இழுத்துச் செல்லுகிறது. வாழ்க்கை என்னும் பேராற்றில் நங்கூரம் போடுவதில்லை. அவ்யாறு தன் ஓட்டத்திற்கு எதிர்த்து நிற்பவரையும் தன் ஓட்டத்தில் விழுந்து படுபவரையும் ஒன்றுகவே கொண்டு செல்லுகிறது. அறிஞனும் அறிவிலியும் தங்கள் வாழ் நாள் எல்லையை, ஒருவன் அளவு மிஞ்சி நுகர்ந்தும் மற்றவன் ஒரு சிறிதும் நுகராமலும் அடைகின்றனர். நான் இயற்கையைக் காட்டிலும் அறிவுள்ளவனுக இருக்க விரும்பவில்லை; அன்றியும், மனிதனுக்கு இயற்கை விதித்திருக்கும் சட்டங் களுக்குப் புறம்பாக என்னுடைய இன்பத்தைத் தேடவும் விரும்பவில்லை.

என் இன்ப துன்பங்களைத் தெரிவித்துக் கொள்ளக்கூடிய ஒரு நண்பனைப் பெறவே நான் சிறப்பாக விழைந்து நின்றேன். என்னை ஒத்தாரிடையே பலகால் அந்நண்பனைத் தேடினேன். ஆனால், அழுக்காறுடையவர்களையே கண்டேன். ஆயினும், உணர்ச்சியுள்ள, நன்றியுள்ள,

நம்பிக்கை கொண்ட, தவருன எண்ணங்களுக்கு இடந் தராத ஒருவனைப் பெற்றேன். உண்மையில் அவன் என் இனத்தைச் சேர்ந்தவனல்லன். விலங்கினத்தைச் சார்ந்த வனுவான். இதோ நீங்கள் பார்க்கும் நாய்தான் அவன். இந்நாய் சிறிய குட்டியாய் இருக்கும் பொழுது பசியால் இறக்கும் நிலையில் இதை ஒரு தெருக்கோடியில் எவரோ விட்டு விட்டார். எனக்கு இரக்க முண்டாயிற்று. இதனை வளர்த்தேன். இது என்னிடம் அன்பு பாராட்டிற்று. இதனைப் பிரியா நண்பனுகக் கொண்டேன்.

அது மட்டுமன்று. ஒரு நாயைக் காட்டிலும் துன்பத்தை உடையவனுயும், மனித சமூகத்தின் இன்னல்களை எல்லாம் தெரிந்தவனுயும், அவ்வின்னல்களைப் பொறுப்பதற்கு எனக்கு உதவி செய்பவனுயும், இயற்கையின் நலன்களையே விரும்புப வனுயும், அவனேடு யான் இன்பம் நுகர்வதற்குத் தகுதி யுடையவனுயும் உள்ள ஒரு நண்பனை யான் அடைய விரும் பினேன். மெல்லிய இரண்டு செடிகள் பிணைந்து இருப் பதினுலேயே பெருங் காற்றை எதிர்த்து நிற்கின்றன. இறைவன் எனக்கு ஒரு நல்ல பெண்ணைத் துணையாகத் தந்து என் விருப்பத்தை நிறைவேற்றினுன். என் துன்பங் களின் அடிப்படையிலேதான் என் இன்பத்தின் அடிப்படை யைக் கண்டேன்.

ஓர் இரவு பார்ப்பனர் சுடுகாட்டுக்குச் சென்றபோது, அங்கு நிலவொளியில் மஞ்சள் முக்காடிட்டுத் தன் உடலைப் பாதி மறைத்து நின்ற ஒரு பார்ப்பன இளநங்கையைக் கண்டேன். எனக்கு இடர் இழைத்தவர்களின் குருதியிற் ருேன்றிய அப்பெண்ணின் தோற்றத்தினுல் வெகுண்டு சிறிது பின்னடைந்தேன். ஆனுல், அவள் கவனத்தோடு மேற்கொண்டிருந்த பணியைப் பார்த்து இரக்கங் கொண்டு அவளை அணுகினேன். அவள், தன் குல வழக்கப்படி தன் தந்தையின் உடலோடு, சிறிது காலத்துக்கு முன் உயிருடன் கிடத்தி எரிக்கப்பட்ட தன் தாயின் உடற் சாம்பலை மூடி யிருந்த ஒரு மேடையின்மீது உணவுப் பொருள்களை வைத்து,

தாயின் ஆவியை அங்கு எழுந்தருளப் பண்ணுவதற்காக நறும்புகை காட்டினாள். எனினும், மிகுந்த துன்பத்தை யுடைய இன்னொருத்தியை யான் கண்டபோது என் கண் களில் நீர் தளும்பிற்று. ''அந்தோ! நான் இழிவு என்னும் தளையினால் கட்டப்பட்டிருக்கிறேன். பெருமை என்னும் பிணி உன்னைப் பிணித்திருக்கிறது. என் பாதாளத்தினடியில் நான் அமைதியாகவேனும் வாழ்கின்றேன். நீயோ, உன் பாதாளத்தின் மேற்கரையில் எப்பொழுதும் நடுங்கிக் கொண்டி ருக்கிறாய். எந்த ஊழ்வினை உன் தாயை உன்னிடமிருந்து கொள்ளை கொண்டதோ, அந்த ஊழ்வினையே உன்னையும் ஒரு நாளைக்குக் கவர்ந்து கொள்ளும். நீ ஒரு பிறப்பைத்தான் பெற்றாய். ஆனால், இரண்டு சாக்காடு உனக்குண்டு: உன் சொந்த சாவு உன்னைச் சவக் குழியிலே இழியச் செய்யாது போயின், உன் கணவன் சாவு உன்னை உயிரோடு அதில் இழுத்துச் செல்லும்,'' என்று எண்ணினேன்; எண்ணி அழுதேன். அவளும் அழுதாள். நீர் நிறைந்த எங்கள் கண்கள் சந்தித்தன. ஏழைகளைப் போல அவை பேசின. அவள் தன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். முக் காட்டினால் தன்னை மூடிக் கொண்டு அவ்விடம் விட்ட கன்றாள்.

மறு நாளிரவு அதே இடத்திற்குத் திரும்பவும் சென்றேன். இம்முறை அவள் தன் தாயின் சாம்பற் குழியின்மேல் உணவுப் பொருள்களை முன்னிலும் மிகுதியாக வைத்திருந் தாள். அவை எனக்குத் தேவையாயிருந்தன வென்று அவள் தீர்மானித்திருந்தாள். பறையர்கள் உண்பதைத் தடுப்பதற்காகப் பார்ப்பனர்கள் இழவுக்குரிய உணவுகளில் பெரும்பாலும் நஞ்சு கலப்பது வழக்கமாகையால், அவள் உணவுகளில் எனக்கு நம்பிக்கையை உண்டாக்குவதற்காகப் பழ வகைகளையே கொண்டு வந்து வைத்தாள். மனிதத் தன்மையின் இவ்வறிகுறி எனக்கு உருக்கத்தை உண்டாக் கியது. அவள் ஈந்த புத்திரக் காணிக்கையில் நான் கொண்ட மரியாதையை வெளிப்படுத்தும் பொருட்டு அவள் பழங்களை எடுத்துக் கொள்வதற்குப் பதிலாக அவற்றோடு சில பூக்களை

வைத்தேன். அவை கசகசாப் பூக்கள். அவள் துயரத்தில் நான் கொள்ளும் பங்கினை அவை அறிவித்தன.

மறு நாளிரவு என்னுடைய முகமனை அவள் ஏற்றுக் கொண்டாளென்று களிப்புடன் கண்டேன். கசகசாப் பூக்களில் நீர் தெளித்திருந்தது. சாம்பற் குழிக்குச் சிறிது தொலைவில் பழம் நிறைந்த புதிய கூடையொன்றை அவள் வைத்தாள். அன்பும் நன்றியறிவும் என்னை ஊக்கின. அவளை இடர்க்குட்படுத்தாதிருக்க, பறையனைப் போலப் பேசத் துணியாமல், பொதுவாக மனிதனைப் போல், என் உள்ளத்திலே அவள் எழுப்பிய அன்புணர்ச்சிகளை அவளுக்குச் சொல்லத் தொடங்கினேன். இந்தியாவில் உள்ள வழக்கப்படி என் எண்ணங்களை அவள் அறிந்து கொள்வதற்காகப் பூக்களைப் பற்றிய பேச்சைப் பயன்படுத்தினேன். கசகசாப் பூக்களோடு சூரியகாந்திப் பூக்களையும் வைத்தேன்.

அடுத்த இரவு கசகசாப் பூக்களும் சூரியகாந்திப் பூக்களும் நீரினால் நனைந்திருக்கக் கண்டேன்.

மறு நாளிரவு மேலும் துணிவு கொண்டேன். கசகசாப் பூக்களோடும், சூரியகாந்திப் பூக்களோடும், சக்கிலியர்கள் தோலைக் கருமையாக்க உபயோகிக்கும் ஒருவிதச் சப்பாத்திப் பூ ஒன்றைப் பணிவான எளிய அன்புக்குறிகுறியாக வைத்தேன்.

மறு நாள் விடியலில் சுடுகாட்டிற்கு ஓடினேன். அங்குச் சப்பாத்தி மலர் நீர் தெளிக்கப்பட்டிராமையால், வதங்கிக் கிடந்தது.

அடுத்த இரவு நடுங்கிக் கொண்டே அங்கு ஒரு பூவரசு மலரை வைத்தேன். அம்மலரின் சிவந்த இதழ்களும் கருமையான உள்ளிடமும் என்னை எரித்துக் கொண்டிருந்த கனலை வெளிப்படுத்தின.

அடுத்த நாள் என் பூவரசு மலர் சப்பாத்தி மலரின் நிலையை எய்தியிருந்தது. துயரத்தில் மூழ்கினேன்.

ஆயினும், அதற்கடுத்த நாள் அச்சங் கலந்த எனது வேட்கையின் அறிகுறியாக முள்ளோடு கூடிய ஒரு ரோசா அரும்பைக் கொண்டு போனேன். வைகறையில் அந்த ரோசா அரும்பு சாம்பர்க் குழிக்குத் தொலைவில் கிடப்பதைக் கண்டபோது நானடைந்த உள்ளச் சோர்வினை என்னென்று சொல்லுவேன்! யான் மனந் தடுமாறி விடுவேனென் றெண்ணினேன். எனக்கெது நேரினும் அவளுடன் பேசுவ தென்ற முடிவுக்கு வந்தேன்.

அடுத்த இரவு அவள் அங்குக் காணப்பட்டவுடனே அவள் கால்களில் விழுந்தேன். நான் கொண்டுபோன ரோசா மலரைக் கொடுத்துத் திகைத்து நின்றேன். அவள் பேசத் தொடங்கினாள்:

"துயருள்ள மனிதனே! நீ என்னிடம் காதலைப் பற்றிக் கூறுகிறாய். இன்னும் சற்று நேரத்தில் நான் உயிரோடு இருக்கமாட்டேன். இப்பொழுதுதான் இறந்துவிட்ட என் கணவருடன் என் தாயைப் போல நான் சிதைக்குச் செல்ல வேண்டும். அவர் வயது முதிர்ந்தவர். நான் குழந்தைப் பருவத்தில் அவரை மணந்து கொண்டேன். விடைபெற்றுக் கொள். விலகிப் போய்விடு. என்னை மறந்துவிடு. இன்னம் மூன்று நாட்களில் நான் ஒரு பிடி சாம்பலாய் விடுவேன்!" என்று கூறிக் கொண்டே பெருமூச்செறிந்தாள்.

நான் துன்பமே மேலிட்டவனாய், "ஏழைப் பார்ப்பனப் பெண்ணே! சமூகம் உனக்குத் தந்த தளைகளை இயற்கை உடைத்தெறிந்து விட்டது. மூடக் கொள்கையின் கட்டுகளை நீ முறித்தழித்துவிடு. என்னைக் கணவனாகக் கொண்டு நீ அங்ஙனம் செய்யலாம்," என்றேன்.

அவள் அழுது கொண்டே, "என்னே! உன்னோடு அவமானத்தில் வாழ்வதற்காகச் சாவினின்று நான் தப்ப

வேண்டுமா? நீ என்னைக் காதலிப்பதாயிருந்தால், நான் இறக்கும்படி விட்டுவிடு,'' என்று மறுத்துக் கூறினாள்.

''ஆ! வேண்டா! உன் துன்பங்களினின்று உன்னை யான் மீட்பது என் துன்பங்களிலே உன்னை ஆழ்த்துவதற்காகட்டும். அன்புள்ள அந்தணப் பெண்ணே! இருவரும் காட்டுக் குள்ளே ஓடி விடுவோம். மனிதர்களைப் பார்க்கிலும் புலிகளை நம்பலாம். நான் நம்பும் இறைவன் நம்மைக் கைவிட மாட்டான். வா, ஓடி விடலாம். காதல், இருள், உன் துன்பம், உன் மாசற்ற தன்மை இவையெல்லாம் நமக்குத் துணை செய்கின்றன. களிப்பற்ற கைம்பெண்ணே! விரைந்து செல்லுவோம். உன் சிதையும் சித்தஞ் செய்யப்படுகிறது. இறந்த உன் கணவர் அச்சிதைக்கு உன்னை அழைக்கிறார். துவளுங் கொடியே! என் மேல் சாய்ந்துகொள். நான் உனக்குப் பனைமரமாவேன்,'' என்று உரக்கச் சொன்னேன்.

அப்பொழுது அவள் பெருமூச்செறிந்து, தன் தாயின் சாம்பர்க் குழியை உற்று நோக்கினாள்; பின் வானத்தைப் பார்த்தாள்; அதன் பிறகு தன் கைகளுள் ஒன்றை என் கையில் அமைத்தாள்; மற்றொரு கையினால் என் ரோசா மலரை எடுத்துக் கொண்டாள். உடனே அவள் தோளைப் பற்றிக் கொண்டேன். இருவரும் நடக்கலானோம். அவள் முக்காட்டுத் துணியைக் கங்கையாற்றில் எறிந்துவிட்டேன். அவள் கங்கையில் விழுந்து இறந்துவிட்டாளென்று அவள் உறவினர் எண்ணிக் கொள்வதற்காக அங்ஙனஞ் செய்தேன். பகற்பொழுதில் வயல்களிலே மறைந்திருந்து, பல இரவு ஆற்றங் கரை வழியே நடந்தோம். கடைசியாக, முற் காலத்தில் போரினால் குடி மக்கள் அற்றுப்போன இந் நாட்டுக்கு வந்தோம். இக்காட்டினுள்ளே நுழைந்தேன். இங்கு இக் குடிசையைக் கட்டி ஒரு சிறு தோட்டத்தையும் உண்டாக்கினேன். இதில் நாங்கள் மிக இன்பமாக வாழ்கின்றோம். பகலவனைப் போல என் மனைவியை நான் போற்றுகின்றேன். திங்களைப் போல அவளிடம் நான் அன்பு செலுத்துகின்றேன். இந்தத் தனித்த இடத்தில் நாங்கள்

எல்லாமுமாயிருக்கின்றோம். உலகம் எங்களை வெறுத்தது. நாங்கள் ஒருவரையொருவர் மதிக்கின்றோமாகையால், நான் அவளுக்குக் காட்டும் பெருமையும் அவள் எனக்குச் செய்யும் பெருமையும் ஒரு நாட்டு மக்களின் புகழ்ச்சியை விட மிக இனிமை வாய்ந்தனவாகத் தோன்றுகின்றன.''

இவ்வார்த்தையைச் சொல்லிக் கொண்டே அவன், தொட்டிலில் உறங்கிய தன் பிள்ளையையும் ஆனந்தக் கண்ணீர் பெருக்கிய தன் மனைவியையும் பார்த்தான்.

பண்டிதர் தம் கண்களினின்று ததும்பிய நீரைத் துடைத்துக் கொண்டு, அவனுக்குக் கூறலுற்றார்: ''உண்மையில் மனிதர்களிடத்தில் எது மேன்மையாக இருக்கிறதோ, அஃது அவர்கள் வெறுப்புக்குரியதாயிருக்கிறது. எஃது அவர்களால் வெறுக்கப்படுகிறதோ, அஃது அவர்களால் மேன்மைப்படுத்தத் தகுதியுள்ளதாயிருக்கிறது. கடவுள் நேர்மையானவர். சூழ்ந்த புகழிலிருக்கும் ஜெகந்நாதத்து அந்தணத் தலைவரைப் பார்க்கிலும் நீ உன்னைச் சூழ்ந்த இருளிலே ஆயிரம் மடங்கு இன்பமுடையவனாயிருக்கிறாய். அவ்வந்தணத் தலைவரும் அவர் குலமும் செல்வப் புரட்சிகளுக்கெல்லாம் ஆளாக வேண்டியிருக்கின்றனர். இத்தனை நூற்றாண்டுகளாக உன் அழகிய நாட்டைப் பாழாக்கி வருகின்ற உட்சண்டை வெளிச் சண்டைகளின் கேடுகளில் பெரும்பாலன அந்தணர்களைச் சார்கின்றன. மக்களின் கொள்கைகளில் அவர்கள் செலுத்தும் ஆட்சியின் காரணமாக, கட்டாய வரிப் பணங்கள் அம்மக்களிடந்தான் பெரும்பாலும் கேட்கப்படுகின்றன. இன்னும் அவர்களுக்கு மிகக் கொடியதாயிருப்பது, மனிதத் தன்மையற்ற அவர்கள் மதத்திற்கு அவர்களே முதலில் பலியாவதாகும். தவறுகளைப் பிறருக்குக் கற்பித்துக் கற்பித்து உண்மை, நீதி, மனிதத் தன்மை, இறையன்பு முதலிய உணர்ச்சிகளெல்லாம் அற்றுப் போகும் அளவில், அவர்களே தவற்றில் மூழ்கி விடுகின்றார்கள். மூடக் கொள்கைகள் என்னும் சங்கிலிகளால் அவர்கள் கட்டுண்டிருக்கிறார்கள். அச்சங்கிலிகளைக்

கொண்டு நாட்டு மக்களைத் தங்கள் வயப்படுத்த அவர்கள் விரும்புகின்றார்கள். அடிக்கடி குளிக்கவும், தூய்மைப் படுத்திக் கொள்ளவும், குற்றமற்ற எண்ணிறந்த இன்பங்களை நுகராதிருக்கவும் அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகின்றார்கள். கடைசியாக, அருவருப்பின்றிச் சொல்ல முடியாத கொடிய மதக் கோட்பாடுகளின் தொடர்பாக அவர்கள் தங்கள் உறவினப் பெண் பாலார்களை, தாய்மார்களை, உடன் பிறந்த பெண்களை, புதல்வியர்களைக்கூட உயிருடன் எரிக்கின்றார்கள். இவ்வண்ணமாக இயற்கையின் சட்டத்தை மீறிய அவர்களை இயற்கையே தண்டிக்கிறது. உனக்கோ, வாய்மையுள்ளவனாகவும், நல்லவனாகவும், நேர்மையாளனாகவும், விருந்தோம்புபவனாகவும், கடவுளிடத்தன்புடையவனாகவும் இருக்க உரிமை உண்டு. உன்னுடைய தாழ்மையினாலேயே நீ இறைவனின் ஒறுத்தலினின்றும் நாட்டுக் கொள்கையின் தீமைகளினின்றும் விடுபடுகின்றாய்.''

இவ்வுரையாடலுக்குப் பின் பறையன் பண்டிதரிடம் விடை பெற்றுக் கொண்டு, அவர் ஓய்வு கொள்வதற்காகத் தன் மனைவியோடும், தன் குழந்தையின் தொட்டிலோடும், அடுத்திருந்த ஒரு சிறிய அறைக்குச் சென்றான்.

மறு நாள் விடியற்காலையில் ஆலமரத்தின் கிளைகளுக்கிடையே கூடுகட்டி உறைகின்ற புள்ளினங்களின் இன்னோசையாலும், காலையில் ஒன்றாகச் சேர்ந்து கடவுள் வழிபாடு செய்கின்ற பறையன் அவன் மனைவி இவர்களின் குரல்களினாலும் பண்டிதர் எழுப்பப் பெற்றார். அவர் துயிலினின்று எழுந்த பின் பறையனும் அவன் மனைவியும் கதவைத் திறந்து கொண்டு வந்து அவருக்கு வணக்கம் செய்த பொழுது அவர் மிக வருந்தினார். ஏனெனில், அக்குடிசையில் இல்லறத்துக்குரிய கட்டில் ஒன்றே ஒன்று இருந்ததையும், அதனை அவர்கள் அவருக்குத் தந்துவிட்டு, இரவு முழுதும் கண் விழித்துக் கொண்டிருந்ததையும் அவர் அறிந்தார். கணவனும் மனைவியும் பண்டிதருக்கு வணக்கம் செய்த பின்

அவருக்குக் காலை உணவு சித்தஞ் செய்ய முற்பட்டனர். அப்போது பண்டிதர் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்து வந்தார். தோட்டமும் குடிசையும் ஒன்ருேடொன்று பின்னிக் கொண்டிருக்கும் ஆலமரத்தின் விழுதுகளால் சூழப்பட்டிருந் ததையும், அதனுல் பார்வைகூடச் செல்ல முடியாதபடி அவை வேலியாய் அமைந்திருந்ததையும் அவர் கண்டார். தம்மைச் சுற்றிலும் பள்ளத்தில் நிலைக் குத்தாக நிற்கின்ற கற்பாறையின் சிவந்த பக்கங்கள் மாத்திரம் இலைகளுக்கு மேலே அவருக்குக் காணப்பட்டன. அப்பக்கங்களினின்று ஒரு சிறிய நீரூற்று வெளிப்பட்டு, ஒழுங்கின்றிச் செடிகள் நடப்பட்ட அந்தத் தோட்டத்திற் பாய்ந்து கொண்டிருந்தது. அத்தோட்டத்தில் வரிசையின்றி வங்குஸ்தான், ஆரஞ்சு, தென்னை, உலிச்சி, மா, பலா, வாழை மரங்களும், பூக்களும் பழங்களும் நிறைந்த மற்ற மரங்களும் இருந்தன. அடி மரங்கள்கூட பூக்களாலும் பழங்களாலும் மூடப்பட்டி ருந்தன. வெற்றிலைக் கொடி, பாக்குமரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது. மிளகுக் கொடி கருப்பங் கழிகளின்மீது படர்ந்திருந்தது. காற்று அவற்றின் மணத்தைக் கவர்ந்து வீசிற்று. மரங்களிற் பல இன்னும் நிழலிலே இருந்தன எனினும், கதிரவன் முதற் சுடர்கள் அவற்றின் உச்சியை ஒளி செய்யத் தொடங்கிவிட்டன. அவ்வுச்சிகளில் கெம்பு போலவும் பீதமணிகள் போலவும் மின்னுகின்ற தூக்கணங் குருவிகள் பறந்து கொண்டிருந்தன. வங்காளச் சிட்டுக் குருவிகளும் 'ஐந்நூறு குரல்' என்னும் பெயரிய குருவிகளும் குளிர்ந்த இலைகளிலே மறைந்து, தங்கள் கூடுகளினின்று இனிய கானத்தை எழுப்பின. பண்டிதர் கலையறிவு பற்றிய எண்ணங்களையும் பேராசைக்குரிய நினைப்புக்களையும் விடுத்து, மரங்களின் இனிய நிழலிலே உலாவிக் கொண்டி ருந்தார். அப்பொழுது பறையன் காலை உணவு கொள்ள அவரை அழைத்தான்.

''உன் தோட்டம் மிகவும் இன்பமாய் இருக்கிறது. மிகவும் சிறியதாயிருப்பதைத் தவிர இதனிடம் வேறு குற்றங் காண்பதற்கில்லை. இஃது என்னுடையதாயின், இதனேடு

ஒரு பசும் புற்றரையைச் சேர்ப்பேன். அதனைக் காடு வரையில் பரவச் செய்வேன்,'' என்றார் பண்டிதர்.

அதற்குப் பறையன், ''ஐயரே, இடம் எவ்வளவுக் கெவ்வளவு சிறியதாயிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பாதுகாப்பு அதிகமாயுள்ளது. ஒரு சிட்டுக் குருவியின் கூட்டுக்கு ஒரே இலை போதும்,'' என்று கூறினான்.

பிறகு இருவரும் குடிசையுள் நுழைந்தனர். ஒரு மூலையில் பறையன் மனைவி தன் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். உணவுக்கு வேண்டியதை அவள் சித்தஞ் செய்து வைத்திருந்தாள். அமைதியாக உண்ட பின் பண்டிதர் பயணப்பட எத்தனித்தார்.

**பறையன்:** விருந்தினரே! இரவு பெய்த மழையினால் நாட்டுப்புறங்களெல்லாம் இன்னும் நீர் நிறைந்திருக்கின்றன. வழிகள் நடக்கக் கூடியனவாயில்லை. ஆதலின், நீங்கள் இன்றையப் பொழுதை எங்களோடு கழிப்பது நலம்.

**பண்டிதர்:** அஃது இயலாது, என்னோடு பலர் இருக்கின்றனர்.

**பறையன்:** நீங்கள் அந்தணர்கள் நாட்டைச் சீக்கிரம் கடந்து போய், மக்கள் எல்லாரையும் உடன் பிறந்தார்களைப் போல வாழச் செய்கின்ற சமயத்தையுடைய கிறித்தவர்கள் நாட்டையடைய முனைகின்றீர்களென்பதை நான் அறிகிறேன்.

பண்டிதர் பெருமூச்செறிந்து எழுந்து நின்றார். அப்பொழுது பறையன் தன் மனைவிக்கு ஒரு சமிக்கை காட்டினான். அவள் நிலத்தை நோக்கிய வண்ணம் ஒன்றுஞ் சொல்லாமல் பூக்களும் பழங்களுமுள்ள ஒரு கூடையைப் பண்டிதரிடம் கொடுத்தாள். பறையன் அவளுக்காகத் தான் பேச முனைந்து கூறலுற்றான்:

''ஐயரே! எங்கள் ஏழ்மைக்கு எங்களை மன்னியுங்கள். இந்தியாவின் வழக்கப்படி எங்கள் விருந்தினருக்கு நறுமணம் ஊட்ட எங்களிடத்தில் அம்பரும் அகிலுமில்லை, பூக்களும்

பழங்களுந்தான் இருக்கின்றன. என் மனைவியின் கையினுல் நிரப்பப் பெற்ற இக்கூடையை நீங்கள் வெறுக்கமாட்டீர் களென்று நினைக்கிறேன். கசகசாப் பூவும், சூரிய காந்திப் பூவும் எங்களிடத்தில் இல்லை. ஆனுல், மல்லிகையும் முருக்கம் பூவும் இனிய ஆரஞ்சும் இருக்கின்றன. அவை, தமது நறுமணப் பொழுதளவிற்கு எங்கள் அன்பின் அறி குறியாய் இருக்கும். எங்கட்கு அவ்வன்பின் நினைவு உங்களை நாங்கள் காணுவிடத்தும் இருந்து கொண்டிருக்கும்.''

பண்டிதர் கூடையை எடுத்துக் கொண்டு, ''உன் னுடைய விருந்தோம்பலுக்கு நான் எங்ஙனம் நன்றி பாராட்டுவதென்பதும், நான் உன்பால் வைத்துள்ள மதிப்பத் தனையும் எங்ஙனம் காண்பிப்பதென்பதும் எனக்குத் தெரிய வில்லை. இந்தப் பொற்கடிகாரத்தை ஏற்றுக்கொள். இது **கிரகாமி**னுடையது. அவர் இலண்டன் மாநகரத்துப் பெயர் போன கடிகாரக்காரர். இக்கடிகாரத்துக்குச் சாவி கொடுப் பது ஆண்டுக்கொரு முறைதான்,'' என்ருர்.

**பறையன் :** ஐயரே! எங்களுக்குக் கடிகாரம் தேவை யில்லை. எப்பொழுதும் நடந்து கொண்டிருக்கும் கடிகாரம் ஒன்று எங்களுக்கு உண்டு. அஃது எப்பொழுதும் கெட்டுப் போவதில்லை. பரிதியே அக்கடிகாரம்.

**பண்டிதர் :** என் கடிகாரம் மணிகளை அடித்துக் காட்டும்.

**பறையன் :** எங்கள் புள்ளினங்கள் அம்மணிகளைப் பாடிக்காட்டும்.

**பண்டிதர் :** உன் மனைவிக்கும் உன் குழந்தைக்கும் சிவந்த கழுத்தணிகள் செய்வதற்காக இந்தப் பவழக் கோவைகளையேனும் பெற்றுக் கொள்.

**பறையன் :** எங்கள் தோட்டத்தில் யானைக் குன்றி மணிகள் இருக்குமளவும் என் மனைவிக்கும் என் குழந் தைக்கும் சிவந்த கழுத்தணிகளுக்குக் குறைவில்லை.

**பண்டிதர் :** இத்தனித்த இடத்தில் திருடர்களினின்று உங்களைப் பாதுகாத்துக் கொள்ள இக் கைத் துப்பாக்கிகளை ஏற்றுக் கொள்.

**பறையன் :** ஏழ்மை எங்களிடமிருந்து திருடர்களைத் தொலைவில் நிறுத்தும் ஒரு பெரிய மதிலாகும். உங்கள் கருவிகளில் பொதிந்துள்ள வெள்ளியே திருடர்களை எங்கள் பால் இழுப்பதற்குப் போதுமானதாகும். எந்தக் கடவுளிடமிருந்து எங்கள் வெகுமானத்தை நாங்கள் எதிர்பார்க்கின்றேமோ, எங்களைக் காக்கின்ற அந்தக் கடவுள் பேரால் உங்களை வேண்டிக் கொள்ளுகிறேம். எங்கள் விருந்தோம்பலின் பயனை எங்களிடமிருந்து கவர்ந்து கொள்ளாதீர்கள்.

**பண்டிதர் :** ஆயினும், என்னிடமிருந்து எதையேனும் பெற்று நீங்கள் வைத்திருக்க வேண்டுமென்று யான் விரும்புகிறேன்.

**பறையன் :** நீங்கள் அப்படி விரும்புவதால், யான் ஒரு பரிவருத்தனையைக் குறிக்கிறேன். உங்கள் புகை குடி குழாயை என்னிடம் கொடுங்கள். என்னுடையதை நீங்கள் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் குழாயில் நான் புகை குடிக்கும்பொழுது, 'ஓர் ஐரோப்பிய பண்டிதர் ஓர் ஏழைப் பறையனின் விருந்தோம்பலை ஏற்றுக்கொள்ள அருவருப்புக் கொள்ளவில்லை!' என்று நினைவு கூர்வேன்.

இங்ஙனம் சொல்லியவுடனே பண்டிதர், இங்கிலாந்து தோலினுல் செய்யப்பட்டு, பொன் அம்பரால் வாயமைந்த தம் புகைக் குடிக் குழாயைப் பறையனுக்குக் கொடுத்து, மூங்கிலாற் குழையும் சூளையிட்ட மண்ணினுல் வாயும் செய்யப் பெற்ற அவன் புகைக் குடிக் குழாயைப் பதிலாகப் பெற்றுக்கொண்டார்.

அதன் பின், இரவை இன்பமாகக் கழிக்காமல் பனியில் விறைத்துக் கிடந்த தம் ஆட்களை அழைத்தார்; பறையனைக் கட்டித் தழுவிய பின் தம் பல்லக்கிலேறினுர். பறையன் மனைவி தன் குழந்தையைக் கையில் வைத்துக் கொண்டு அழுதுகொண்டே குடிசையின் வாயிலில் நின்ருள். ஆனுல், அவள் கணவன் காட்டின் வெளிவரையில் பண்டிதரை வாழ்த்திக் கொண்டே உடன் சென்ருன்; சென்று, "எளியவர்கள்பால் நீங்கள் கொண்ட அன்புக்குக் கடவுளே உங்களுக்கு வெகுமானமாகட்டும். நான் உங்களுக்குப் பலிப்

பொருளாகட்டும். மக்களின் இன்ப வாழ்வுக்காக உலக மெங்கும் உண்மையைத் தேடும் அறிஞர்களும் நண்பர்களும் உள்ள இங்கிலாந்து நாட்டுக்கு உங்களைக் கடவுள் இன்ப மாகக் கொண்டு சேர்க்கட்டும்!'' என்று கூறினேன்.

பண்டிதர், ''இந்த நிலவுலகத்தில் பாதியளவுக்கு நான் பிரயாணம் செய்திருக்கிறேன்; எங்கணும் தவற்றையும் பிணக்கையுமே பார்த்தேன்; உண்மையையும் இன்பத் தையும் உன் குடிசையிலேதான் கண்டேன்!'' என்றார்.

அதற்குப் பின் கண்ணீர் சிந்திக் கொண்டே ஒருவரை யொருவர் விட்டுப் பிரிந்தனர். பண்டிதர் நாட்டுப்புறத்தில் வெகு தொலைவில் சென்றுவிட்டார்; ஆயினும், ஒரு மரத் தடியில் நின்று, ''போய் வாருங்கள்,'' என்று தன் கைகளினால் குறி காட்டுகின்ற அந்த நல்ல பறையனைப் பார்த்துக் கொண்டே இருந்தார்.

பண்டிதர் கல்கத்தாவுக்குத் திரும்பி வந்ததும் சந்திர நகருக்குப் பயணமானார். அங்கிருந்து இங்கிலாந்துக்குக் கப்பலேறினார். இலண்டன் மாநகரம் வந்ததும் அவருடைய தொண்ணூறு மூட்டைக் கையேடுகளை அரச கழகத்தின் தலைவரிடம் கொடுத்தார். அத்தலைவர் அவற்றை ஆங்கிலக் காட்சிச் சாலையில் வைத்தார். அங்குக் கலை வல்லுநரும், பத்திரிகைக்காரர்களும் அவற்றிற்கு இன்றுகூட மொழி பெயர்ப்புகள், புகழுரைகள், பழிப்புரைகள், கண்டனங்கள், குறிப்புகள் முதலியன எழுதிக் கொண்டிருக்கிறார்கள். பண்டிதரைப் பொறுத்த மட்டில் அவர் உண்மையைப் பற்றிப் பறையன் கூறிய மூன்று விடைகளையும் தமக்கென வைத்துக் கொண்டார். அடிக்கடி அவன் குழாயில் அவர் புகை குடிப்பார். அவர் மேற்கொண்ட வழிப் பயணங்களிலே அவர் அறிந்து கொண்ட மிக்க பயனுள்ளதைக் குறித்து அவரைக் கேட்டால், அதற்கு அவர், ''உண்மையை இயல்பான உள்ளத்தோடு தேட வேண்டும். அதனை இயற்கையிலேதான் காணலாம். அதனை நன்மக்களுக்குத்தான் சொல்லலாம்,'' என நவில்வார். அதோடு அவர், ''ஒரு நல்ல மனைவியோடு தான் இன்பமாக வாழலாம்,'' என்றும் இயம்புவார்.

# 'சிந்தனை' வெளியீடுகள்

ஒவ்வொரு வெளியீடும் அறிஞர்களின் ஆலோசனையின் பேரிலும், தக்கவர்களைக் கொண்டும் சிந்தனையைத் தூண்டு மாறும் சிறந்த முறையில் வெளியிடப்படுகிறது. பல்கலைக் கழகங்களுடைய ஆதரவும், பத்திரிகைகளின் பாராட்டு தலும் பெற்றது.

**கல்வி—ஒரு மதிப்பீடு** *(கல்வியியல்)* ரூ. 2-50

வ. ஈசுவரமூர்த்தி, எம். ஏ., (விசுவபாரதி) எம். ஏ. (ஆக்சன்)

சிந்தனையைத் தூண்டாத கல்வி பயன் தராது என்ற முடிவுடன், நமது கல்வி முறையின் குறை நிறைகள் தக்க சான்றுகளுடன் ஆராயப்பட்டிருக்கிறது. ஆக்க வழிக் கல்விச் சிந்தனைக்கு வழிகாட்டும் நூல்.

**பெர்னூர்டு ஷா** *(திறனாய்வு)* ரூ. 5-00

பேராசிரியர் ஜி. கே. செஸ்டர்டன்.

'எல்லோரும் எதிர்பார்த்தபடி இந்நூல் நான் இதுகாறும் எழுப்பிய திறனாய்வு ஆராய்ச்சி நூல்களில் மிகவும் சிறந்து விளங்குகிறது' என்று, ஷாவே பாராட்டியிருக்கிறூர்.

**அம்பபாலி** *(நாடகம்)* ரூ. 1-25

டாக்டர் அ. தியாகராசன், எம். ஏ., எம். பி., பி. எஸ்.

"டாக்டருக்கு முன் எவராலும் இவ்வளவு அழகிய முறையில் இனிய நடையில் பொருள் விளங்க ஒரு நாடகம் உருவானதேயில்லை......" —குயில்

**குடியாட்சி** *(அரசியல்)* ரூ. 2-25

பேராசிரியர் டாக்டர் சி. ஈ. எம். ஜோடு, எம். ஏ., டி. லிட்.

"......கருத்துச் செறிவுடைய இந்நூலை வெளியிட்ட சிந்தனைப் பதிப்பகத்தாரின் சீரிய முயற்சியைப் பாராட்டு கிறோம்......" —தமிழ் நாடு

**சூழ்நிலையும் மனிதனும்** *(உளவியல்)* ரூ. 2-50

டாக்டர் தா. ஏ. சண்முகம், எம்.ஏ., எம்.லிட்., பிஎச். டி.

"மிகச் சிறந்த நூல். தமிழ் நூல்களில் காண முடியாத அளவு நிறையச் செறிவுடைய கருத்துக்களைக் கொண் டுள்ளது. அதனுல் இது விரிவாகப் படிக்கப்படுதல் வேண்டும்..." —இந்து

**பணம்** *(பொருளியல்)* ரூ. 1-50

பேராசிரியர் அர. சேஷாசலம், எம். ஏ.

"தெளிந்த கருத்தாழம் நிரம்பிய இந்நூல் பொருளா தாரம் கற்போருக்கு ஒரு விருந்து......" —திராவிட நாடு

பொது நூல் நிலையங்கட்கும் விற்பனையாளர்களுக்கும் கழிவு உண்டு.

## சிந்தனைப் பதிப்பகம்

அ. பெ. எண். 771 :: சென்னை-8.

# அடுத்து வரும் புதிய வெளியீடுகள்

## உலகத்துச் சமயங்கள்

திரு. குமார கோமேதகவேலு, எம். ஏ., ஐ. ஏ. எஸ்.

## தமிழுக்கு ஒருவர்

திரு. எல். கிருஷ்ணசாமி பாரதி, எம்.ஏ., பி.எல்.

## நிருவாகக் கலை

பேராசிரியர் திரு. சி. வேலாயுதம்,
எம். ஏ., எல். டி., பீ. காம். (சிறப்பு) (இலண்டன்)

## இந்தியப் பண்பாடு

பேராசிரியர் T. தனக்கோடி, எம். ஏ.

?

டாக்டர் அ. தியாகராசன் அளிக்கும் புதிய படைப்பு



பெர்னூர்தன் தெ சேன்பியேர் (Bernardin de Saint-Pierre) பிரெஞ்சு நாட்டின் புகழ்மிக்க எழுத்தாளர். பொறியியல் வல்லுநர்; இயற்கை விஞ்ஞானி; பகுத்தறிவாளர்; நூலாசிரியர்; முற்போக்குச் சிந்தனையாளர். பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட ழான்-ழாக்-ருசோவின் மாணவர். அறவியல் கணக்காயர்.

அவர் லெ ஆவர் என்னும் நகரத்தில் 1737-ம் ஆண்டில் பிறந்தவர். உலகம் அறிந்த மேதை. பல நூல்களை எழுதியிருக்கிறார். ஆழமான தத்துவக் கருத்துக்கள் கலைச் சிறப்புடன், அவருடைய நெடுங் கதைகளில் கான்று கொண்டிருக்கும். இப்பூவுலகில் எழுபத்தேழு ஆண்டுக் காலம் வாழ்ந்தவர்.